மலர்-5 இதழ்-117 ஜூலை 16-31 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்**

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

**ஆடி மாதமும் கொங்கு நாட்டின் வழிபாடும்**



www.aanmeegamalar.com

e- magazine

# ஈசனின் சாபத்தால் உருவான ஆடி மாதம்

# தாமச குணம், ராட்ஷச குணம்

எவனொருவன் சாஸ்திர விதிகளுக்கு எதிராக எப்பொழுதும் செயல்படக்கூடியவனாகவும், சுகபோக வாழ்க்கையில் விருப்பம் கொள்ளக்கூடியவனாகவும், பிடிவாத குணம் உடையவனாகவும், மற்றவர்களை ஏமாற்றும் குணங்கள் நிறைந்தவனாகவும், மற்றவர்களை அவமானம் செய்வதில் நிபுணத்துவம் உடையவனாகவும், எந்த வேலையும் செய்யாமல் இருக்கக்கூடியவனாகவும், எப்போதும் சோகத்துடன் காணப்படக்கூடியவனாகவும் மற்றும் எப்பொழுதும் காலம் தாழ்ந்து எந்தவொரு வேலையையும் செய்யக்கூடியவனாகவும் இருக்கக்கூடிய மனிதன் தாமச குணத்தில் இருப்பதாக கூறப்படுகின்றது.




மனிதன் எந்த புத்தியினால் தர்மத்தையும், அதர்மத்தையும் செய்ய தகுந்த காரியங்களையும், செய்ய தகாத காரியங்களையும் இடையே இருக்கின்ற வேறுபாடுகளை அறிய இயலாத புத்தி என்பது ராட்சஸ குணத்தில் இருப்பதாகும்.

## குழந்தைப்பேறு அடைய...

1. ஏகம்பரநாதர் திருக்கோவில், காஞ்சிபுரம்.
2. சங்கரராமேஸ்வரர் திருக்கோவில், தூத்துக்குடி.
3. சிவசுப்ரமண்யசுவாமி திருக்கோவில், குமாரசாமிபேட்டை, தர்மபுரி.
4. தாயுமானசுவாமி திருக்கோவில், மலைக்கோட்டை, திருச்சி.
5. பாலசுப்ரமணியசுவாமி திருக்கோவில், ஆயக்குடி, தென்காசி.
6. மயூரநாதசுவாமி திருக்கோவில், பெத்தவநல்லூர், ராஜபாளையம்.
7. முல்லைவனநாதசுவாமி திருக்கோவில், திருக்கருகாவூர்.
8. நச்சாடை தவிர்தருளியசுவாமி திருக்கோவில், தேவதானம், ராஜ பாளையம்.
9. விஜயராகவபெருமாள் திருக்கோவில், திருபுட்குழி.




## கல்வி வளம் பெருக...

1. கரிவரதராஜ பெருமாள் திருக்கோவில், மாதவரம்.
2. தேவநாதசுவாமி திருக்கோவில், திருவஹிந்தீபுரம், கடலூர்.
3. மகாசரஸ்வதி அம்மன், கூத்தனூர். பூந்தோட்டம்.
4. வரதராஜபெருமாள் திருக்கோவில், செட்டிபுண்ணியம்.

## ஆயுள் பலம் தரும் திருக்கோவில்கள்

1. அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில்,திருக்கடையூர்,
2. எமனேஸ்வரமுடையார் திருக்கோவில், எமனேஸ்வரம், பரமக்குடி
3. காலகாலேஸ்வரர் திருக்கோவில், கோவில்பாளையம்,
4. சித்திரகுப்தசுவாமி திருக்கோவில், காஞ்சிபுரம்,
5. தண்டீஸ்வரர் திருக்கோவில், வேளச்சேரி,
6. ஸ்ரீலிவனேஸ்வரர் திருக்கோவில். திருப்பைஞ்ஞீலி.
7. வாஞ்சிநாதசுவாமி திருக்கோவில், வாஞ்சியம்,

# ஆடி-கறுப்பு தை-வெள்ளை

# நிறம் மாறும் விநாயகர்

கன்னியாகுமாரி மாவட்டம், தக்கலை அருகே கேரளபுரம் என்ற ஊரில் உள்ள பிள்ளையார் இரண்டுவித கலருக்கு மாறும் அதிசயம் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது.

தை முதல் ஆனி வரை உள்ள காலத்தில் வெள்ளை நிறமாக காட்சியளிக்கிறார் இந்த விநாயகர். ஆடி முதல் மார்கழி வரை உள்ள காலத்தில் கறுப்பு நிறமாகவும் காட்சியளிக்கிறார்.




தற்போது ஒன்றரை அடி உயரம் உள்ள விநாயகர் ஆரம்பத்தில் அரை அடி உயரம்இருந்த தாக கூறப்படுகிறது.

இந்த விநாயரை திருவிதாங்கூர் மன்னர் வீரகேரள வர்மன், ராமநாதபுரம் மன்னனை சந்திக்க வந்த போது ராமேஸ்வரம் அக்னி தீர்த்தத்தில் நீராடிவிட்டு வரும்போது காலில் ஒரு கல் இடறியதால், அந்த கல்லை எடுத்துப் பார்த்தபோது, அந்த கல் விநாயகர் உருவத்துடன் காட்சியளித்தது.

அதை எடுத்துச் சென்று ராமநாதபுரம் மன்னனிடம் காட்டியுள்ளார், ராமநாதபுரம் அரசனின் பரிசாக இறைவனே அளித்துள்ளதாக கூறி அந்த சிறு விநாயரை தங்கள் நாட்டில் பிரதிஷ்டை செய்து வழிபடுமாறு வீரகேரள வர்மனிடம் ராமநாதபுர அரசர் கூறியுள்ளார்.

இந்த சிலையை குமரி மாவட்டத்திலுள்ள தக்கலை எனும் ஊரில் அமைந்துள்ள அரசமரத்தடியில் வீரகேரள வர்மன் பிரதிஷ்டை செய்து வழிபட்டுள்ளார்.

பிரதிஷ்டை செய்யும் போது 6 அங்குலம் இருந்த பிள்ளையார் தற்போது 18 அங்குளத்திற்கும் அதிகமாக வளர்ந்துள்ளார்.

இந்த பிள்ளையாரை ஆய்வு செய்த புவியியல் துறையினர், இந்தக் கல் முழுவதும் இந்திரகாந்தம் என்னும் அரிய கல் மூலம் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

இப்பகுதியில் நிறம் மாறும் விநாயகர் என்றே மக்கள் அழைக்கின்றனர்.

ஆடி மாதம் தொடங்கும்போது பிள்ளையாரின் தலை உச்சியிலிருந்து கொஞ்சம் கொஞ் சமாக வெளுக்கத் தொடங்கும்.

இதுவே தை மாதம் தொடங்குகையில் மெல்ல மெல்ல பாதம் கறுக்கத் தொடங்குகிறது. ஆறாம் மாதம் வரை வெள்ளை நிறம் அப்படியே இருக்கும். இங்குள்ள விநாயகரின் நிறத்தைப் பொறுத்து இந்த பிள்ளையார் அமர்ந்துள்ள அரசமரமும் நிறம்மாறுகிறதாம்.


புனிதவேல்

ஆடிமாத துவக்கத்தில் சிறு கரும்புள்ளி தோன்றி படிப்படியாக மாறி மார்கழிக்குள் முழுவதும் கரு நிறத்தில் மாறிவிடுகிறார்.

அதே போன்று தை முதல் நாளில் வெண்ணிற புள்ளி தோன்றி ஆனி மாதத்திற்குள் முழுவதும் வெள்ளை நிறத்திற்கு மாறிவிடுகிறார்.

ஆடிமுதல் நாள், தை முதல் நாள் இந்த விநாயகரை பார்ப்பது சிறப்பு.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572

# நவகிரகங்களை மாற்றி, பஞ்சத்தை போக்கிய

# இடைக்காடார் கோவில்

இடர்தீர்க்கும் இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32 அறப்பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதியாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவ பக்தர்களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங் கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந் துள்ளார்.

அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரணமாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ்சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்திதார். இந்தக் காலகதியை வெல்ல ஒரு வழியையும் கண்டறிந்து வைத்திருந்தார்.

தன் குடிசையைப் புதுப்பிக்கும் போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்துவிட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லாவிட்டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புறவில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச்சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரிசியாகக் கீழ் விழும்.

இடைக்காடர் போகியல்ல, யோகி. அவருக்கு ஒரு கைப்பிடி அரிசி ஒருநாளைக்குப் போதும். அதைக் கொண்டு கஞ்சிகாய்ச்சிக் குடித்தார். ஆடுகளும் அவரும் அந்த வறண்ட காலத்திலும் அழகாக தப்பிக் கொண்டே இருந்தனர்.

நவக்கிரகங்கள் கொடுத்த தாக்கத்தில் பூமியே திண்டாடும் போது, இடைக்காடாரும், அவரின் ஆடுகளும், எந்த பஞ்சமும் இன்றி வாழ்ந்ததை அறிந்த நவகிரகங்கள், இதற்கான காரணத்தை அறிய முற்பட்டது.

மாற்று உருவம் ஏற்படுத்தி நவக்கிரகங்கள் இடைக்காடாரின் குடிசைக்குள் நுழைந்தனர். வந்திருப்பவை கோள்கள்தான் என்பதைத் தனது சித்தஞானத்தால் உணர்ந்து கொண்டார் இடைக்கடார்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற்கினங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறுவேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.






முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச்சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங்கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண்ணங்களை அப்படியே மறை யச் செய்தது.

உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஒய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஒரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

அவர்கள் கண்விழித்தபோது பெரிய அளவில் மழை பெய்து இடைக்காட்டூர் மலையாற்றில் வெள் ளம் புரண்டு கொண்டிருந்தது.



அழகுராஜா

விழித்தெழுந்த கிரகங்கள், முன்பு அமர்ந்திருந்த நிலையில் தங்களில் சிலர் இடம் மாறி புதிய திசை நோக்கி அமர்ந்திருப்பதைக் கண்டனர். அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய் இடைக்காடரைப் பார்த்து நின்றனர்.

இடைக்காடர்சிரித்தார்.

"என்னை அறிய வந்தவர்கள் நீங்கள், நானோ, உங்களை முன்பே அறிந்தவன், எங்களை விடவா நீ பெரியவன் என்பது உங்கள் எண்ணம். என்னை விட எல்லாமே பெரியது என்பதே என் எண்ணம். அதனாலேயே உலகம் உவந்து வாழ உங்களில் சிலரின் நிலைப்பாட்டை அதாவது சஞ்சாரத்தை மாற்றியமைத்தேன்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட்களை மட்டுமல்ல, கோள் களையும் மாற்றும் வல்லமை அவர் களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்டவர்களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ












முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குருபெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது.

பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடைபெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.

சிறிய கோவிலாக உள்ள இடைக்காடர் சித்தர் கோவிலை ராஜ கோபுரம், மகாமண்டபம், அன்னதான கூடம், தியான மண்டபம் மற்றும் தங்கும் வசதி சுகாதார வசதிகளை தமிழக இந்து சமய அறநிலைத்துறை செய்துதர வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலையில் மதுரையில் இருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் கோவில் அமைந்துள்ளது. மதுரை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்தும், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் இருந்தும் இடைக்காட்டுருக்கு அரசு பஸ் வசதி உள்ளது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# கூச்சீஸ்வரர் ஜேஷ்டாதேவி ஆலயம்

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் வீராபுரம் கிராமத்தில் அமைந்துள்ளது கூச்சீஸ்வரர் ஆலயம். திருக்கழுக்குன்றதிலிருந்து நெரும்பூர் செல்லும் வழியில் கருமாரப்பாக்கம் கிராமத்தை அடுத்து இது அமைந்துள்ளது.

கல்வெட்டு தகவல்:

திருக்கழுக்குன்றம் வட்டம் நெரும்பூர் உள்வட்டத்தில் வீராபுரம் என்கின்ற ஊர் உள்ளது. இந்த ஊரில் கூச்சீஸ்வரர் என்கின்ற சிவன் கோயில் உள்ளது. கோயிலில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன. சோழர் காலத்தில் உஞ்சீஸ்வரர் தாழ்வார் கோயில் என இந்த கோயில் அழைக்கப்பட்டுள்ளது. இளங்கண்ணல் ஏரன், அருள்நிலை நம்பி திருநீலகண்டன் இருவரும் மண்டபம் எடுத்துள்ளனர். கி.பி.988 –ல் அநுக்கப்பீமன் படைபிரிவில் இருந்த விடங்கன் என்பவனால் கோயில் கட்டப்பட்டு வழிபாட்டு தொடரவும் திருவமுது நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அருநிலை நம்பிபோல் புலியூரைச் சேர்ந்த தேவன் வைரமோகன் என்பவர் கோயிலில் விளக்கு எரிக்க நன்கொடை அளித்துள்ளார். செம்பூர் கோட்டத்து நெடுங்குன்ற நாட்டு நெடுங்குன்றமாக வீராபுரம் சோழர் காலத்தில் இருந்துள்ளது.பல்லவர் கால சோமஸ்கந்தர் சிலையும் சிவலிங்கமும் பூமியில் புதைந்த நிலையில் இருந்துள்ளது.

ஜேஷ்டாதேவி சிலை அருகில் உள்ள குளத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.15.09.1935 கோயிலில் திருப்பணி புரிந்து கல்வெட்டு வைத்துள்ளனர். சமீபத்தில் கோயில் மீண்டும் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

கூச்சீஸ்வரர் ஜேஷ்டாதேவி ஆலய தகவல்:

தவ்வை என்பவர் விஷ்ணுவின் மனைவியும் லட்சுமிதேவியின் மூத்த சகோதரியும் ஆவார்.

இவர் பெண் இந்து சமய பெண் தெய்வங்களுள் ஒருவராவார். இவருக்கு தவ்வை ஜேஷ்டா தேவி, அலட்சுமி போன்ற பெயர்களும் உண்டு.

**பெயர்கள்:**

தவ்வை என்ற பெயரில் இவரை தமிழ் நூல்கள் குறிப்படுகின்றன. திருவள்ளுவர், ஔவையார் போன்றோர் தவ்வையைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர். சமஸ்கிருதத்தில் ஜேஷ்டா தேவி என்று அழைக்கின்றனர்.








## தொன்மவியல்

இந்துத் தொன்மவியல்படி பாற்கடலைக் கடைந்த போதுஜேஷ்டா தேவி தோன்றியதாகக் கூறப் படுகிறது. அவரது தங்கை லட்சுமி அமிர்தம் தோன்றும் முன்பு தோன்றியதாகக் கூறப்படுகிறது.

## தவ்வை வழிபாடு

தவ்வை ஏழு கன்னியர்களில் ஒருத்தியாக பலகாலங்களாக வழிபடப்பட்டு வந்துள்ளாள். ஆய்வாளர்கள் தாய்த் தெய்வ வழிபாட்டில் இந்த தவ்வை வழிபாடு இருந்துள்ளதாகக் கூறுகின்றனர்.

ஏழு கன்னியர்களுள் தவ்வை குழந்தைப் பேறு வழங்கும் தெய்வமாக வழிபடப்பட்டுள்ளார். சமண சமயத்திலும் பிறகு சாக்ததிலும் தவ்வை வழிபாடு இருந்துள்ளது. ஏழு கன்னியர்களில் ஒருத்தியாக வழிபடப்பட்டு பிறகு தனியாகப் பிரிக்கப்பட்டாள்.

சாக்த வழிபாட்டில் சக்தி பீடத்தின் வடிவான மேரு மலை பூசையில் ஒன்பது படிக்கட்டுகள் அமைக்கப்படுகின்றன. அவற்றினை நவா பரணம் என்று அழைக்கின்றனர். இந்த ஆபர ணங்களில் இரண்டாவது ஆபரணமாகத் தவ்வை இருக்கிறார்.

பல்லவர்களின் ஆட்சிக் காலமான 8ஆம் நூற்றாண்டில் தமிழர்களின் தெய்வமாக தவ்வை வழிபடப்பட்டுள்ளார். பல்லவர்கள் அமைத்த கோயில்களில் தவ்வைக்குச் சிலைகள் வைக்கப் பட்டு வழிபாடு நடைபெற்றுள்ளது.

நந்திவர்ம பல்லவன் தவ்வையைக் குலதெய்வ மாக வழிபாடு செய்துள்ளார். பல்லவர்கள் காலத்திற்குப் பிறகு பிற்காலச் சோழர்களின் காலத்திலும் தவ்வை வழிபாடு இருந்துள்ளது.

தவ்வை வழிபாடு திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் வெகுவாகக் காணப்படுகிறது. தவ்வையை பயணத்தில் விபத்துகள் ஏற்படாமல் இருக்க வழிபடுகின்றனர். சோம்பலை நீக்கி சுறுசுறுப்பான வாழ்வைத் தர தவ்வையை வழிபட வேண்டும். தவ்வையை வண்ணார்கள் எனப்படும் இனத்தவர்கள் ஏகவேணி என்ற பெயரில் வணங்குகின்றனர். இவ்வண்ணார்களை ஏகாலி என்றும் அழைக்கின்றனர்.

## கோயில்கள்

தவ்வைக்கு வாராணாசியிலும், அஸ்சாமின் கௌஹாத்தியிலுள்ள காமாக்யாவிலும் கோயில் அமைந்துள்ளது. திருப்பதியில் உள்ள நீலாத்ரி மலையில் நீளா தேவிக்கு கோயில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் வீராபுரம் கிராமத் திலும் கோயில் அமைந்துள்ளது.

## கோயில் அமைப்பு:

இறைவன் கிழக்கு பக்கம் பார்த்துநமக்கு அருள்பாலிக்கின்றார். அம்மன் மங்கலாம்பிகை. கருவரையை சுற்றி வருகையில் வினாயகர். தட்சணாமூர்த்தி. விஷ்ணு. பிரம்மா, துர்காதேவி சிலைகள் உள்ளன.

பைரவர் சிலை தனியாக உள்ளது. கோயி லுக்கு பக்கத்தில் ஜேஷ்டாதேவிக்கு ஆலயம்











உள்ளது. ஆலயத்தின் உள்ள வேலைப்பாடுகள் அருமையாக அமைந்துள்ளன. ஆலயத்தின் முன்புறம் மூனீஸ்வரர் சிலையும், கருப்பண்ண சாமி சிலையும் உள்ளது.

கருவரையின் முன்னர் சங்கநிதி பத்ம நிதி சிலைகள் உள்ளன. ஐராவதம். காமதேனு, பால திரிபுரசுந்தரி, பஞ்சகல்யாணி, ஐயனார், யோக ப்ரித்யங்கா, யோகவராகி மகாலட்சுமி ஆகியோர் சிலைகள் தத்ரூபமாக அமைந்துள்ளன.

ஆலயத்தின் எதிரில சிறிய தொட்டியில் நீர் நிரம்பி அதில் ஆமை சிற்பம் உள்ளது. சட்டென பார்க்கையில் தண்ணீரில் ஆமை உள்ளதுபோல் உள்ளது. நவகிரக சன்னதி எதிரில் அமைந்துள்ளது. கோயிலுக்கு அருகில் பெரியகுளம் உள்ளது. தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. அந்த ஆலயத்தில் இருந்து பார்க்க திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலை தெரிகின்றது. (திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் மலையை சுற்றி உள்ள எட்டு ஆலயங் களில் இது இரண்டாவது என நினைக்கின்றேன்)


வேலன்

## ஆலயச்சிறப்புகள்:

திருமணத்தடை, தொழில்வேலை வாய்ப்பு, வியாபாரத்தடை, புத்திரபேறு தடை, ஏவல் பில்லி சூன்யத்தால் ஏற்படும் தடைகள் விலகும். ஆலய பூஜாரி தொடர்புக்கு:திரு.மோகன் அவர்கள் போன்:9600918511

கிராமத்து சூழலில் கோயில் அருமையாக உள்ளது. நேரம் கிடைக்கும் சமயம் சென்று வாருங்கள்.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# எலுமிச்சை பழ வேண்டுதலுக்கு குழந்தை பாக்கியம் தரும் பிரம்மசாஸ்தா முருகன்





www.aanmeegamalar.com

ஏரிகாத்த இராமர், ஏரிகாத்த அம்மன் என பல தெய்வங்களை கேள்விப்பட்டு இருப்போம். ஆனால் ஏரியில் கண்டெடுக்கப்பட்ட ஏழு அடி உயர பிரம்மாண்டமான பிரம்ம சாஸ்தா கோல முருகனைப் பற்றி எங்கேனும் கேள்வி பட்டதுண்டா?

அப்படிப்பட்ட அதி அற்புதமான அழகு ததும்பும் முருகன் வீற்றருளும் தலம்தான் குமரஞ்சேரி.

தொண்டை மண்டலத்தின் அனேக இடங் களில் பிரம்ம சாஸ்தா வடிவிலான முருகன் திருமேனிகளை தரிசித்திருக்கலாம். ஆனால் இங்குள்ளது போன்று பிரம்மாண்டமான வடிவில் சுமார் 7 அடி உயரத்திலான குமரனை இந்த குமரஞ்சேரியில் மட்டுமே நாம் காண முடியும்.

முதன்முதலில் கல்லிலே கலைநயம் கண்ட பல்லவர் கால கலைச்சிற்பம் இந்த கந்தன் என்பதில் துளியும் ஐயமில்லை.

கி.பி.ஆறாம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தில் பல குடைவரைக் கோயில்களையும், பல்வேறு கலை நயம்மிக்க சிற்பங்களையும் வடித்த பெருமை யாவும் நரசிம்மவர்ம பல்லவனின் மகனான மகேந்திரவர்ம பல்லவனையே சேறும். எனவே மகேந்திரவர்ம பல்லவனின் கைவண்ணத்தில் எழுந்ததுதான் இந்த முருகன் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் ஆணித் தரமான கூற்றாகும்.

அரசர் காலத்தில் கோவிலுள் இருந்து கோலோச்சிய இந்த கந்தன் காலப்போக்கில் காணாமல் போய் ஏரிக்குள் மறைந்தார். கடந்த 2000வது ஆண்டில், கோடை காலத்தில் ஏரி வற்றியபோது, முருகனின் சிரசு மட்டும் வெளியே தெரிந்தது. அதை கண்ட ஊர்மக்கள் ஒன்றுகூடி, 10 அடி ஆழத்திலிருந்த முருகன் சிலையை வெளியே எடுத்து, ஏரிக்கரையில் கொட்டகை போட்டு அதில் குமரனை குடியமர்த்தினார்கள்.

இராஜேந்திரன் என்பவரின் பெருமுயற்சியால் ஆலயம் எழுப்பப்பட்டு, பின்னர் ஆலயத்திற்கு இடம்பெயர்ந்தார் இந்த குகன்.

வெயிலில் காய்ந்த கந்தனுக்கு கொட்டகை அமைத்து தந்தவன், பின்னர் கோமகனாக மாறிய கதையும் உண்டு. ஆலயம் எழுப்பிய இராஜேந்திரன் அயல்நாடு (மலேசியா) சென்று அளவற்ற செல்வம் சேர்த்தார்.

2003–ஆம் ஆண்டு குடமுழுக்கு பின்னர் குழந்தை வரம் வேண்டுவோர்க்கு குழந்தையும், புதுவீடு வேண்டுவோருக்கு புது வீடும் அளித்தார் இந்த வள்ளிமணாளன். மழை வேண்டிய அன்பருக்கு மழையைக் கூட தந்தருளினார். கல்யாண வரத்தோடு, வழக்குகளிலும் வெற்றியை தந்தார். வியாபார விருத்தி, கல்வி விருத்தியென இந்த முருகன் தந்த வரங்கள் ஏராளம். அவன் செய்த அற்புதங்கள் எண்ணற்றவை.

அற்புதமிக்க இந்த கந்தன் தனது அடியார்கள் பொருட்டு ஏரிக்கரையின் மீது எழிலாய்க் கோவில் கொண்டு திகழ்கின்றார்.

முன்மண்டபம் பிரம்மாண்டமாக அமைந்திட, அடுத்தபடியாக சிறிய மகா மண்டபம் காணப் படுகின்றது. பின்னர் இடை மண்டபமும்



கருவறையும் அமைந்துள்ளன. மகா மண்டபத்தில் கணபதியும், கந்தனும் வீற்றருள்கின்றனர்.

கருவறையுள் கருணைமுகம் காட்டி, வலது மேல் கரத்தில் அக்ஷ மாலையும், இடது மேல் கரத்தில் கமண்டலமும் கொண்டு, இடது கீழ் கரத்தை தொடையில் மடித்தும், வலது கீழ் கரத்தால் அபயம் அளித்தபடி அருள் சுரக்கும் அழகிய திருமேனியுடன் ஆஜானுபாகுவாக திருக்காட்சி தந்து நம்மையெல்லாம் திக்கு முக்காடவைக்கின்றார். உற்சவர் சிலையும் உடனுள்ளது.



மோ.கணேஷ்

வெளியே எதிரில் மயில் வாகனம் உள்ளது. உடன் கந்தனது வேலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இங்கே விசேடங்களாக... சித்திரா பௌர்ணமி, சித்திரை கிருத்திகை, ஐப்பசி கந்தர்சஷ்டி ஆகியன சிறப்புடன் அனுசரிக்கப்படுகின்றன.

சித்திரை கிருத்திகையில் பக்தர்கள் அலகுக் காவடி எடுத்து வருவது சிறப்பு. ஒவ்வொரு செவ்வாய் மற்றும் கிருத்திகையில் இங்கு முருகனுக்கு பக்தர்களால் சிறப்பு அபிஷேக அலங்காரங்கள் செய்யவிக்கப்படுகின்றன.

பக்தர்களை தனது மந்திரப் புன்னகையால் வசீகரிக்கும் இந்த குமாரசுவாமியிடம் குழந்தை வரம் வேண்டி வருபவர்கள்.... கிருத்திகையில் இங்கு தம்பதி சமேதராக வந்து சுவாமியின் வலது கரத்தில் ஒரு எலுமிச்சை கனியை வைத்து அர்ச்சனை செய்ய வேண்டும். அதன் பின்னர் பிரசாதமாகத் தரப்படும் எலுமிச்சைக்கனியை முந்தானைத் துணியில் முடித்து கோவிலுக்கு வலப்புறம் உள்ள வேப்ப மரத்தில் கட்டி, பிரார்த்திக்க வேண்டும்.

இவ்வாறு செய்ய... விரைவில் குழந்தை பாக்கியம் கிட்டும் என்பது பலரது அனுபவமாக உள்ளது.

புது வீடு, நிலம் வாங்க விரும்புபவர்களும், தொழிலில் மேன்மையடைய நினைப்பவர்களும்... தொடர்ந்து ஆறு செவ்வாய்க்கிழமைகள் இந்த கோவிலுக்கு வந்து, ஆறு முறை கோவிலை வலம் வந்து முருகனுக்கு செவ்வரளி பூக்களால் அர்ச்சனை செய்து வழிபட... விரும்பியபடியே வீடு நிலம் அமைகிறது. தொழிலிலும் அமோக வளர்ச்சி கண்டு ஆனந்தம் அடையலாம்.

கடந்த 2019ஆம் ஆண்டு இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டு, மிக சிறப்புடன் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள இந்த குமரஞ்சேரி, பொன்னேரி பழவேற்காடு பேருந்து சாலையில் உள்ள மெதூரில் இருந்து வடக்கே 10 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. பொன்னேரியில் இருந்து பனப்பாக்கம் செல்லும் பேருந்தில் பயணித்து, ஆலயத்தின் அருகே இறங்கிக் கொள்ளலாம்.

ஆலய அர்ச்சகர்: வி.ரமேஷ் சிவாச்சாரியார், Ph: 9443640984.

**ஜோதிட கலாநிதி**
**மோ.கணேஷ் குருக்கள், ஆரணி.**
**தொடர்பு எண்:9789156179**

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

## தொட்டது துலங்கவில்லையா?
## தொடர் பிரச்சனையா? நோயால் அவதியா?
## கயாசுரனை நாடுங்கள்

# பித்ரு தோஷம் நீக்கும் கயாவின் சிறப்பும் வரலாறும்

முன்னோர் திதி, பித்ரு சம்பந்தப்பட்ட அனைத்திற்கும் முதன்மையாக இருப்பது கயா. கயாவின் மஹாத்மியத்தை பல்வேறு புராணங்கள் பல்வேறு விதத்தில் எடுத்துரைத்தாலும், கயாவின் வரலாற்றை மிக எளிமையாக பார்ப்போம்.

அசுரர்கள் என்றால் மக்களுக்கும், தேவர்களுக்கும் கொடுமைகள் புரியும் தீய எண்ணங்களை கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஆனால் இதிலும் பல விதி விலக்கு இருக்கிறது.

குணத்தாலும், செயலாலும் நன்மை புரிந்து, அசுரர் குலத்தில் பிறந்தாலும் அவர்களை தேவர்களைவிட உயர்ந்த நிலையை அடையலாம் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இறைவனால் நடத்தப்பட்ட லீலையின் முடிவுதான் கயா தோற்றத்தின் வரலாறு.

அசுர குலத்தில் தோன்றிய கயாசுரன் கடுமையான தவத்தை மேற் கொண்டான், இதைப் பார்த்த தேவர்கள் நடுங்கினர், கயாசுரன் கடும் தவத்திற்கு பலனாக அனைத்துவிதமான சக்திகளும் பெற்றால் பூலோகத்தையும் தேவலோகத்தையும் சின்னாபின்னமாக்கிவிடுவானோ என்ற அச்சம் தேவர்கள் மத்தியில் நிலவியது.

நாளுக்கு நாள் கயாசுரனின் தவத்தின் சக்தி தேவலோகத்தையே நடுங்கவைத்தது...



இதை கண்ட தேவர்கள் பிரம்மனை நாடினர். தேவர்களின் பயத்தை பிரம்மாவிடம் தெளிவாக கூறினர். பிரம்மதேவர் தேவர்களுடன் சிவ பெருமானை நாடினார்கள். சிவபெருமான் அனை வருடன் இணைந்து விஷ்ணுவை நாடினார்கள். அவர்களின் பயத்தைப் போக்க பகவான் விஷ்ணு கயா அசுரனிடம் வேண்டிய வரத்தைக் கேள் என நேரடியாகக் கேட்டார்.. இதைக் கேட்ட தேவர்கள் நடுங்கிப் போனார்கள்.

இருப்பினும் கயாசுரன் உடனடியாக பகவான் விஷ்ணுவிடம் தேவர்கள் ரிஷிகள் துறவிகளை காட் டிலும் என் உடல் புனிதமாக போற்றப்பட வேண்டும். என்னை தொடுபவர்களுக்கு புனிதம் கிட்ட வேண்டும் என வேண்டினான்.. விஷ்ணு பக வானும் அவன் விருப்பத்தை வரமாக அருளினார்.

கயாசுரனின் தவத்திற்கான பலனின் வீரியம் தெரியாத தேவர் கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர். நல்லதை நினைத்து கயாசுரன் பெற்ற வரத்தின் பின்விளைவுகளை பிற்காலத்தில் அனைவரும் உணரத் தொடங்கினர்.

கயாசுரன் பெற்ற வரத்தின் மகிமையை அறிந்த பலர் தங் களது இறுதி காலத்தில் அவ னை தரிசித்து சுலபமாக சொர்க்கத்தை அடைந்தனர். தீய வர்கள், அசுரர்கள், கொடிய பாவம் செய்தவர்கள் கூட கயாசுரனின் தவப் பலனால் சொர்க்கத்திற்கு சென்றனர்.

பூலோகத்தில் பாவம் செய்த கொடிய வர்கள் தண்டனை அனுபவிக்காமல் சொர்க்கத்திற்கு சென்றதால், நரக லோகம் முழுவதும் கலைக்கப்பட்டு விடுமோ என்ற கவலையில் எமதர்மராஜா பிரம்ம தேவரை நாடி னார்.

நரக லோகம் கலைக்கப்பட்டால் அதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும். அதே சமயத்தில் நரக வேதனையை நினைத்து ஏற்படும் பயமே ஒருவனை நல்வினை பாதைக்கு தூண்டும் என்பதை சிந்திக்க வேண்டும் என எமதர்மராஜா கூறினார். தீயசெயல் களை செய்தாலும் கயாசுரனின் தவப் பலனால் கடைந்தேறி விடலாம் என்ற தைரியம் ஏற்பட்டு விட்டதால் இயற் கையின் நீதியே குளறுபடி ஆகி விடும் என்றும் எமதர்மர் தெரிவித் தார்.

எமதர்மராஜனின் செய்தியில் உண்மை இருப்பதை உணர்ந்த பிரம்மா அவரை அழைத் துக்கொண்டு பகவான் விஷ்ணுவை நாடினார். அப் போதுதான் கயாசுரனின் தவப் பலனின் வீரியத் தை அனைவரும் உணர்ந் தனர்.

பகவான் விஷ்ணுவும் கயாசுரனிடம் விவரத்தை ஒளிமறைவுயின்றி கூறினார், இப்பிரச்சனை தீர தான் ஒரு யாகத்தை நிகழ்த்த விருப்பதாகவும், இந்த யாகம் நிறைவடைய கயாசுரனின் உடலை தானமாகத் தரவேண்டும் என்றும்






மகாவிஷ்ணு கூறினார்.

தனது உடலை தானமாக மகாவிஷ்ணுவே கேட்டதாலும், நல்ல காரியத்திற்கு தன் உடல் பயன்படட்டுமே. என்று எண்ணிய கயாசுரன் தனது உடலை மகாவிஷ்ணுவின் யாகத்திற்கு தானமாக தருவதாக வாக்களித்தான்.

இதற்கு கைமாறாக தனக்கு இன்னொரு வரம் தரவேண்டும் என்ற கோரிக்கையையும் மகாவிஷ்ணுவிடம் கயாசுரன் வைத்தான்.

தன் உடல் யாகத்திற்காக தரப்படும் இடத்தில், எல்லா தெய்வங்களும் தன்னுடைய உடல் மீது உறைய வேண்டும் என்றும். இந்த இடம் ஒரு க்ஷேத்திரமாக மாறவேண்டும், அந்த இடத்திற்கு கயா என்ற தன் பெயரால் அழைக்க வேண்டுமென்றும், இத்திருத்தலத்தில் சிராத்தம் கொடுப்பவர்களின் பித்ருக்கள் அனைவரும் பிரம்மலோகம் செல்ல வழிவகை செய்ய வேண்டும் என்ற வரத்தை கேட்டுப் பெற்றுக்கொண்டான்.

மகாவிஷ்ணுவும் கயாசுரனின் கோரிக்கையை ஏற்றார். பிரம்மா தலைமையில் நடைபெற்ற அந்த வேள்வியில் அனைவரும் பங்கெடுத்துக் கொண்டனர். அத்தருணத்தில் கயாசுரன் செய்த தவப் பலனால் உடல் தொடர்ச்சியாக ஆடிக் கொண்டிருந்தது. எவ்வளவு முயற்சி செய்தும் அந்த ஆட்டத்தை தடுக்க முடியவில்லை.

அப்போது பகவான் விஷ்ணு தனது கதை மூலமாக கயாசுரன் உடல் ஆட்டத்தை நிறுத்தினார்.கயாசுரனின் மார்பின்மீது, தர்மசீலா என்ற கல்லை வைத்து, தம் திருநாமத்தை கல்மீது வைத்து அழுத்தினார் விஷ்ணு.

கயாசுரன் யாகத்திற்காக உடலை அர்ப்பணித்த இடமே கயா என்று போற்றப்படுகிறது.

அசுர குலத்தில் தோன்றினாலும், செய்த செயல் அனைத்தும் புண்ணியம் நிறைந்ததாக இருந்ததால், அனைத்து தெய்வங்களின் சக்தியையும் கயாசுரனின் வேண்டுதலுக்கிணங்க இந்த கயாவில் பெறலாம் என்பதால், கயா மிகப்பெரிய புண்ணியஸ்தலமாக மாறியது.

குடும்பத்தில் தொடர்ந்து சண்டை சச்சரவு, தொட்டவை அனைத்தும் கெட்டவையாக முடிகிறது, பணமிருந்தும் குடும்பத்தில் நிம்மதியில்லை, திருமண பாக்கியம் தள்ளிப்போகுதல், அதிகப்படியான மனசஞ்சலம், உடல் நலமாக இருந்தாலும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருப்பது, குடும்பத்தில் வீண் வாக்குவாதம் நிலவுதல் போன்றவை தொடர்ந்து இருந்தால், கண்டிப்பாக பித்ரு தோஷம்தான் மேற்கண்ட பிரச்சனைகளுக்கு காரணமாக இருக்கும்.

இதுபோன்ற பிரச்சனைகளை சந்திப்பவர்கள் ஒருமுறை கயா சென்று, தங்கள் மூதாதையர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தால் மேற்கண்ட பிரச்சனைகள் எளிதாக தீரும்.

கயாசுரன் பெற்ற வரத்தினால், இந்த இடத்தில் பித்ருக்கள் ஒன்றாக கூடியிருப்பார்களாம், தன் வம்சத்தில் யாராவது ஒருவர் கயாவுக்கு வந்து தம்மை கரையேற்ற மாட்டார்களா என பித்ருக்கள் ஏங்கிக் காத்திருப்பார்களாம்.

ஆடி, தை, புரட்டாசி அமாவாசைகள் தர்ப்பணம் செய்ய உகந்தவைகளாகும், தற்போது ஆடி மாதப் பிறப்பு, இந்த ஆடிமாதத்தில் வரும் அமாவாசையில் வாய்ப்பு கிடைத்தால் கயா சென்று, பித்ரு தோஷத்தை போக்க முற்படுங்கள்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203



ஆர். சதீஷ்,

# மண், நீர், ஒளி, காற்று வேதங்களில் தேவதை

கடவுள் உருவாக்கிய மதம்

யாகங்கள் சரிவர செய்யப்படாததினால் செய்யும்பண்டிதர்களும் யாகங்களை முறைதவறி செய்வதினாலையும் தான் பருவ காலங்கள் தனது கடமைகளை சரிவர செய்ய முடியாமல் இயற்கை அழிவுகளுக்கு விதை தூவுகிறது. இதை உணர்ந்து தேசத்தில் எதாவது ஒரு மூலையில் நியமப்படி வேதகால யாகம் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்றால் பூமி பந்தின் கோபச்சூடு கொஞ்ச நேரம் குறையும்.

நாம் பிராமணனுக்கும், சத்திரியனுக்கும், சூத்திரனுக்கும், ஆரியனுக்கும், அருகில் உள்ளவனுக்கும், அந்நியனுமாகிய அனைத்து ஜனங்களுக்கும் மங்கலகரமான வேதத்தை உபதேசம் செய்கிறேன். காணிக்கை அளிக்கும் தேவர்களுக்கு நான் பிரியமுட னாக வேண்டும் எனது விருப்பம் பூரண மாகட்டும். அது எனது ஸ்வாதினம் ஆகும்.

பிரகஸ்பதியே சத்தியத்தின் புதல்வனே சத்துரு சிறப்புக்கதிகமாயும் அறிவுள்ள ஜனங்களின் நடுவே பிரகாசமுடையதாகிய உறுதியுள்ள செல்வத்தை எமக்களிப்பாய். நீ ஆதரவோடு கிரகிக்கப்பட்டுள்ளாய்.

செல்வம் மிகுந்த இந்திரனே! இங்கே வா நூறு மடங்கு சக்தி உள்ளவனே சோமனை பருகவும் சோமன் பெருமையான சாதனங்களால் நிறைந்துள்ளது. நீ ஆதரவோடு பற்றப்பட்டுள்ளாய். நான் செல்வம் மிகுந்த இந்திரனை பற்றுகிறேன். பசுக்கள் நிறைந்த இந்திரனே இது உனது மூலஸ்தானமாகும். இங்கே வந்து உனது அருளை நிரப்பு.

ஜோதியின் தலைவனாகவும் அழியாதவனாய் உள்ளவனே நாங்கள் நாடுகிறோம். நாங்கள் வைசுவா நரனின் நல்ல நிலையில் சாய வேண்டும் அவனே புவனங்களின் தன்னிகரற்ற தலைவன் ஆவான். இவனே ஜீவனாக தோன்றி விழிகளால் அனைத்தையும் காண்கின்றான். இவன் சூரியனுக்கு சமமாய் உள்ளவன். வெகு தூரத் திலுள்ள வைசுவா நரனை அக்னி எங்கள் அருகில் அழைத்து வரட்டும்.

அக்னி பவித்திரமான ரிஷி ஆவான். பஞ்ச ஜனங்களின் புரோகிதன் அக்னியே. அதிகமாக பிரகாசிக்கவும் ஜோதிவடிவாகவும் உள்ள அக்னியே நீயே செல்வமும் செழுமையும் தரும மூல முதல்வன் பருவகாலங்கள் உனது யாகத்தை விசாலப்படுத்தட்டும். மாதங்கள் உனது அவிர் பாகத்தை ரட்சிக்கட்டும். வருடங்கள் உனது பிரஜைகளை காவல் செய்யட்டும். மலைகள் அருகிலும் நதிகளின் சங்கமத்திலும் தோன்றிய அறிவாளி உனது புகழை பாடி பரவட்டும்.

நாங்கள் வீரமக்கள் எங்கள் பசுக் களும் குதிரைகளும் பல்கி பெருகட்டும்.



சகல புஷ்டிகளுடன் எமது எல்லா விருப்பங்களும் ஓங்கி வளரட்டும். எங்களை சுற்றியுள்ள மனிதர்களும் மற்ற உயிரினங்களும் பெருகி நிரம்பட்டும். தேவர்கள் எங்கள் யாகத்தை பருவ காலத்தோடு வழி நடத்தி செல்லட்டும்.

சோமனே நீ பசியை அழிப்பவன். அனைத்து மனிதர்களின் நண்பனும் நீ. இன்பம் அளிக்கின்ற தாரையுடன் பெருகி நீ வழிய வேண்டும். தங்கத்தால் ஆன துரோனத்தில் சமமான மூலஸ்தானத்தில் வந்து அமர்ந்துக் கொள்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

இந்த பாடல்கள் யஜூர் வேதம் 26வது அத்யாயத்தில் 392வது அனுவாகத்தில் 2 முதல் 26 வரையிலான பாடல்வகளாகும். இவைகளை மீண்டும் ஒருமுறை வாசித்து பாருங்கள் பல உண்மை தெரிய வரும். வேதங்கள் என்பது பிராமணர்களுக்கு மட்டும் உரிமையான சொத்தாகும். அதை மற்ற ஜாதி ஜனங்கள் எந்த வகையிலும் பயன்படுத்தக் கூடாது என்ற கருத்து ஆழமான முறையில் பிரச்சாரம் செய்யப்பட்டு இன்றைய நாள் வரை வந்து கொண்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல வேதங்களை ஓதினால் மற்ற ஜாதிகாரர்களின் நாக்கை துண்டிக்க வேண்டும் காதுகளால் கேட்டால் செவிகளில் ஈயத்தை உருக்கி ஊற்ற வேண்டும் என்பதாகவும் மனுசாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளை அறிவு தெளிவுள்ள எந்த மனிதனும் படித்தாலே அருவருப்பு அடைந்து விடுவான். அதிர்ச்சியில் உரைந்து விடுவான்.

ஆனால் வேதகால கவிஞன் வேதங்களை தனிப்பட்ட சொத்தாக கருதவில்லை. மனிதனாக பிறந்த ஒவ்வொருவனுக்குமே வேதம் சொந்தமாகும் என்று கருதுகிறான். வேதக் கட்டளைக்கு விரோதமாகவும் விருப்பத்திற்கு மாறாகவும் வேதங்களை தனி உடமையாக்கியது யார்? எதற்காக? அது ஜாதிவளைக்குள் சுருட்டப்பட்டுள்ளது என்பதை நாம் சிந்தித்து பார்த்து வாதங்களில் ஈடுபடாமல் வேதத்தை விருப்பமும் தகுதியும் உடைய அனைவருக்கும் கற்பிக்கவும் கற்றவழி நிற்கவும் முன் வரவேண்டும்.

மேலும் புவனங்களின் தலைவனாக இருப்பவனும் மக்களின் உற்பத்திக்கும்






சுகதுக்கங்களுக்கும் ஒருவனே காரணம் என்ற கருத்தும் கவனிக்கதக்கது. தேவதைகளுக்கு பல பெயர்களை வைத்து ரிஷிகள் அழைத்தாலும் அவையாவும் ஒரே தேவதையின் மாறுபட்ட பெயர்களே என்பது தெளிவாகிறது இந்திரன், அக்னி, சோமன் என்ற பெயர்களெல்லாம் மூல பரம் பொருளை குறிப்பிடுவதற்காகத்தான் பயன் படுத்தி இருப்பார்களோ என்ற ஐயத்தையும் ஏற்படுத்துகிறது. இனி உழவத் தொழிலை பற்றி வேதக் கருத்தை பார்ப்போம்.

யஜுர் வேத சுக்கில பகுதியில் வேளாண்மையை பற்றி பல பாடல்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானதாக 12வது அத்யாயத்தில் ஒரு பாடல் உள்ளது. அதில் நிர்த் என்ற தேவதையின் பெயர் குறிப்பிடப்படுகிறது. விவசாயத்திற்கு தேவைபடுவது மண்ணும், நீரும், ஒளியும், காற்றுமாகும். இந்த நான்குமே வேதங்களில் தேவதையாக வணங்கப்படுகிறது.

நிர்த் என்ற வேதகால விவசாய தேவதை பூமியாக விரிந்து கிடக்கிறாள். முதலில் அவள் பச்சை வண்ண ஆடையை உடுத்தி இருக்கிறாள். முடிவில் பொன் வண்ணமாக காட்சி தருகிறாள். அவள் நீராடுவதற்காக குளிர்ந்த நீர்திவலைகளை கார்முகில் என்ற வானப்பந்தலை அமைத்து வருணதேவன் சாரலாக தெளிக்கிறான். நேரம் செல்லச் செல்ல முகிலினங்கள் பெரும் மழையை கொட்டுகிறது. இதில் அந்த தேவதை முழுமையாக குளிர்ச்சி அடைகிறாள். அவள் உடலெங்கும் ஆறுகளும், குளங்களும், ஏரிகளும், அருவிகளும் வெள்ளியை உருக்கி விட்டது போல் பெருகி ஓடுகிறது.

இந்த நேரத்தில் கலப்பைகள் தயார் செய்யப்படுகின்றன. கலப்பையின் முனைகளில் கூர்மையான இரும்பு கொழுவுகள் பொறுத்தப் படுகின்றன. நுகத்தடியில் வெள்ளை எருதுகள் பூட்டப்படுகின்றன. நிர்த் தயாராக இருக்கிறாள். கலப்பைகளை பலமாக பிடித்துக் கொண்டு முன்னால் செல்கிறாள். அதே நேரம் ஏர் முனையை தனது உடலில் தாங்கியும் கொள்கிறாள்.

இரும்பு முனை மண்ணை அழுத்தி கீறுகிறது மண் கீழும், மேலுமாக புரள்கிறது. மலர்களைப் போல் விரிந்து கலப்பை என்னும் வண்டுகளுக்கு மகரந்தத்தை கூடலில் வாரிக் கொடுக்க தயாராகிறது. உழவன் விதைகளை நாலாபுறமும் தூவுகிறான். நிர்த் தேவதை அதை வாங்கிக் கொள்கிறாள். தனக்குள் தாங்கியும் கொள்கிறாள். தனக்கு கிடைத்த ஒரு தானிய மணியை பல நூறு மடங்காக பெருகி தருகிறாள்.

தேவதையின் உடலில் உழவன் ஏறி விளையாடுகிறான். அரிவாள்களைக் கொண்டு முற்றி தலை சாய்ந்த கதிரை அறுவடை செய்கிறான். தன்னை ஏர் கொண்டு பிளப்பதினாலோ வாள் கொண்டு வெட்டுவதாலோ பூமி தேவதை மனிதர்களை கோபத்துடன் முறைப்பது இல்லை

ஏனென்றால் அவள் உயர்களுக்கெல்லாம் தாயை போன்றவள் முலைக்காம்பை குழந்தை கடித்தால் தாய் அதன் வாயை கிழித்து விடவா போகிறாள் வாரி அணைத்து தானே கொள்வாள். அத்தகைய தாயான தானியங்களை கொடுக்கும் நிர்த் தேவதையை வணங்குவோம். அவள் பசியை போக்கும் அன்னை சக்தியை கொடுக்கும் வெண்ணை. நமது மகிழ்ச்சி தீபத்தை சுடர்விட்டு பிரகாசிக்க செய்யும் எண்ணெய். அவளை மீண்டும் மீண்டும் வழிபடுவோம்.

பூமியின் தாகத்தை தனித்தவன் வருணன். தானியங்களை தருபவன் வருணன். வருணனின் செங்குருதியே மழை நீராகும். அந்த குருதியை நீராக பெற்றுக் கொள்ளும் பூமித்தாய் தானியபாலாக நமக்கு புகட்டுகிறாள். அக்னியின் வடிவமான சூரிய தேவனும் ஆகாயத்திலிருந்து இறங்கி வந்த வாயு தேவனும் நிர்த்க்கு உதவி செய்கிறார்கள். அவர்களை நாம் வணங்குவோம். நமது வீட்டு களஞ்சியங்களில் தானியங்களை நிரம்பி வழிய செய்த இந்த நான்கு தேவதைகளும் நமது கருவூலங்கள் ஆவார்கள். அதனால் தங்கநிற தானியங்களை அக்னியிடம் வழங்குவோம். அவன் அவைகளை தேவதைகளுக்கு நிச்சயம் கொண்டு கொடுப்பான்.

இந்த சடங்கு பாடல் தேவகால மக்களின் வாழ்க்கையை நமக்கு படம் பிடித்து காட்டுகிறது. ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு நாடோடியாக திரிந்த ஆரம்பகால மக்கள் யஜுர் வேத காலத்தில் நிலையாக ஒரு இடத்தில் தங்கி விவசாயம் முதலியன செய்ய ஆரம்பித்து இருப்பது இந்த பாடல்களால் நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும்

**போன்: 09442426434**



# நண்பர்களை உருவாக்கும் தெய்வீகக்கலை

அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: "மனிதனுக்கு தன் அன்பைக் காட்ட வேண்டும் என்ற இறைவனுடைய அவாவின் மிக உன்னதமான மனிதத் தோற்றமே நட்புறவு. இறைவன், குழந்தையின்மீது தாய், தந்தையர் மூலம் அன்பைப் பொழிகிறான். குழந்தைமீதான அவர்களது பாசம் இயற்கையாகவே அமையப்பெற்றது; ஏனென்றால், நமது சிருஷ்டி கர்த்தா நம் தாய் தந்தையருக்கு நம்மை நேசிப்பதைத் தவிர்க்க முடியாதபடி விதித்திருக்கிறான். ஆனால் நட்பு என்பது அவனது ("என்னை எல்லையற்ற படைப்பின் இறைவன், மேலும் எல்லா ஜீவராசிகளுடைய நல் நண்பன் என்று அறிபவன் அமைதியைக் காண்கிறான்." பகவத் கீதை அத் 5 ஸ்லோகம் 29) அன்பின் சுதந்திர மற்றும் பாரபட்சமற்ற உருவமாக வருகிறது."

"இரண்டு அறிமுகமாகாதவர்கள் சந்திக்கின்றனர். நொடியில் நிகழ்கிற அவர்களது விருப்பப்படி அவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொள்ள விழைகின்றனர். இது எப்படி நிகழ்கிறதென்று ஆராய்ந்து பார்த்திருக்கிறீர்களா? நண்பர்களாக வேண்டுமென்ற இந்த தன்னிச்சையான பரஸ்பர விருப்பம் இறைவனது தெய்வீக ஈர்ப்பு நியதியிலிருந்து நேரடியாக வருகிறது; கடந்த பிறவிகளில் இரண்டு ஆன்மாக்களுக்கிடையில் இருந்த நட்பினால் விளைந்த பரஸ்பர செயல்களின் திரட்சி, படிப்படியாக ஒரு கர்ம பந்தத்தை உருவாக்கி அது அவர்களை இந்தப் பிறவியில் ஒருவரை நோக்கி ஒருவரை தடுக்க முடியாதபடி ஈர்க்கிறது."

"சுயநலம் மற்றும் எதிர்பால் கவர்ச்சி ஆகியவற்றால் மாசுபடுத்தப்படாத வரையில் இந்தத் தூண்டுதல் தூய்மையானது. ஆனால் பெரும்பாலும் இது களங்கப்படுத்தப்படுகிறது. நட்பானது நமது மிக உள்ளார்ந்த உணர்வுகள் என்ற விருட்சத்தின்மேல் வளர்கிறது; அது தவறான ஆசைகள் மற்றும் சுயநலச் செயல்களால் கறைபடுத்தப்படுகிறது. நீங்கள் தவறானவகை உரத்தை ஒரு மரத்தின் வேர்களில் இட்டால், விளையும் கனிகள் தரம் குறைந்தவையாக இருக்கும். மனித உணர்வு என்னும் மரத்திற்கு சுயநல உணர்ச்சியை ஊட்டினால் உங்கள் தகுதியற்ற உள்நோக்கங்கள் நட்பின் கனியை களங்கப்படுத்திவிடும். ஒருவர் பணக்காரர் அல்லது செல்வாக்குள்ளவர், மேலும் அவர் உங்களுக்கு ஏதாவது செய்ய வல்லவர் என்பதற்காக மட்டும் அவரிடம் அக்கறையாக இருப்பது நட்பல்ல. மேலும் ஒருவரிடம் முக்கியமாக, அவருக்கு அழகிய முகம் உள்ளது என்பதால் அவரிடம் ஈர்க்கப்படுவது நட்பல்ல. அந்த முகம் இளமையின் கவர்ச்சியை இழக்கும்போது அந்த 'நட்பும்' ஆவியாகிவிடும்."

கடந்த பிறவிகளின் நட்புறவுகளை வளர்த்துங்கள்.

ப்ரிய குருதேவர் தொடர்கிறார்: "நட்பை எல்லாயிடத்திலும் காணமுடியாது என்பது உண்மைதான். சில மனிதர்களை நீங்கள் தினமும் பார்த்தும், அவர்களைப்பற்றி அறியாதவர்களாக இருக்கிறீர்கள். மற்றவர்களை

நீங்கள் எப்பொழுதுமே தெரிந்திருப்பதைப்போல் உணர்கிறீர்கள். அந்த உள்ளக்குறிப்பை அடையாளம் தெரிந்துகொள்ள நீங்கள் பயிலவேண்டும். நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் கண்களை திறந்து வைத்திருங்கள்; நீங்கள் யாரிடமாவது தெய்வீகமாக ஈர்க்கப்படுவதாக உணர்ந்தால், நீங்கள் அந்த நபருடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், ஏதோ ஒரு கடந்த வாழ்வில் அவர் உங்கள் நண்பனாய் இருந்திருக்கிறார். நமது கடந்த பிறவிகளில் நாம் அறிந்திருந்த பல நண்பர்கள் உள்ளனர், ஆனால் அந்த நட்புகள் இன்னும் முழுமையாக்கப்பட வில்லை. தாற்காலிக அறிமுகங்கள் என்ற மணலில் ஓர் அடித்தளத்திற்காகத் தோண்டுவதைவிட ஏற்கனவே போடப்பட்ட அடித்தளத்தின்மீது கட்ட ஆரம்பிப்பதுதான் நல்லது. ஒருவர், தமக்கு பல நண்பர்கள் இருப்பதாக, அவர்கள் அவரைப் புண்படுத்தும்படி ஏதாவது செய்யும்வரை எண்ணிக் கொண்டிருப்பது எளிது; பிறகு அவர் பலத்த ஏமாற்றத்திற்குள்ளாகிறார்."

"பலர் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் தவறுகள் செய்கிறார்கள்; ஏனென்றால் அவர்கள் புறத்தோற்றங்களால் மயக்கப்படுகிறார்கள். உண்மையான நண்பர்களை அடையாளம் காண்பதற்கான ஒரே வழி அதிகம் தியானம் புரிதல்தான். தெய்வீக வழியில் நண்பர்களைக் காண நீங்கள் முயற்சி செய்யவேண்டும். அதாவது மற்றவர்களைப்பற்றிய உங்கள் உணர்ச்சிகளை தீர்மானிக்கும் காரணிகள் என்று நீங்கள் நினைக்கும் முகம் மற்றும் பிற தோற்றங்கள் பற்றிய எல்லா எண்ணத்தையும் நீங்கள் உங்கள் உள்ளத்திலிருந்து நீக்க வேண்டும். இதை செய்தால், ஒருநாள் உங்களைச் சுற்றியுள்ள எல்லோரிடமிருந்தும் உண்மையான நண்பர்களை நீங்கள் கண்டுபிடிக்க முடியும். நீங்கள் இறைவனது நட்பினை அந்த எளிய அவனைத் தடுக்காத மனித வாய்க்கால்கள் மூலம் உணர்வீர்கள். உள்ளத்தூய்மை மூலமாக நட்பின் தெய்வீக ஒளி உங்களிடம் பாயும்."

மகாபாரத்தில் "விதுரர் விடுத்த எச்சரிக்கையை" இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எதிரிகளை அழிக்க வெவ்வேறு உபாயங்களைக் கையாள்வது எப்படி என்ற திருதராஷ்டிரரின் கேள்விக்கு, விதுரர் விளக்கமளிக்கத் தொடங்கினார். "ஒரு காட்டில் ஒரு புலி, ஒரு ஓநாய், ஒரு கீரி, ஒரு எலி ஆகியவற்றோரடு ஒரு நரி நட்புறவு கொண்டாடிக்கொண்டிருந்தது. இப்படி நான்கு நண்பர்களுடன் கூடியிருந்தாலும் தன்னுடைய நலனிலேயே அந்த நரி கவனமாக இருந்தது. ஒரு நாள் காட்டில் இந்த ஐந்து மிருகங்களும் ஒரு மான்




கூட்டத்தைக் கண்டன. அந்த மான்கூட்டத்தின் தலைமைமான் கொழுத்திருந்தது. அதைப் பிடித்து தங்களுக்கு உணவாக்கிக்கொள்ள இந்த மிருகங்கள் விரும்பினாலும், அந்த மானின் வேகத்தின் காரணமாக அது இயலாத காரியமாக இருந்தது. தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வது எப்படி என்று இந்த ஐந்து மிருகங்களும் யோசனை செய்தன."

அப்பொழுது நரி ஒரு உபாயம் கூறியது "புலியாரே ! நீங்கள் எவ்வளவு முயன்றாலும் இந்த மானைப் பிடிக்க உம்மால் முடியாது. நான் ஒரு வழி சொல்கிறேன். அந்த மான் தூங்கிக்கொண்டிருக்கும்போது எலி அதை நெருங்கி, அதன் காலைக் கடித்துவிடவேண்டும். புண்பட்ட காலுடன் அந்த மான் சரியாக ஓட இயலாமல் தவிக்கும். அந்த நிலையில் நீங்கள் பாய்ந்தால், அந்த மான் உம்மிடம் சிக்கிவிடும். நீர் அதைக் கொன்ற பின், நண்பர்களாகிய நாம் ஐவரும் விருந்துண்ணலாம்." இந்த யோசனையை புலியும் அங்கீகரித்தது. எலி சென்று மானின் காலைக்கடித்தது. அதன் பிறகு புலி பாய்ந்தபோது மான் வேகமாக ஓட இயலாமல் சிக்கி இறந்தது. "இறந்து கிடந்த மானை ஐந்து மிருகங்களும் சூழ்ந்துகொண்டன. அப்போது நரி, மற்ற நான்கு மிருகங்களிடம், நான் இங்கே காவல் இருக்கிறேன். நீங்கள் நால்வரும் சென்று ஓடையில் குளித்துவாருங்கள். அதன் பிறகு நான் சென்று குளித்து வருகிறேன். பிறகு நாம், ஐவரும் சேர்ந்து இந்த மிருகத்தை அனுபவிப்போம், என்று கூறியது. மற்ற நான்கு மிருகங்களும் சென்ற பிறகு நரி தீர்க்கமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தது.

110
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

“முதலில் திரும்பி வந்தது புலி. அப்போது நரி சோகமாக அமர்ந்திருந்தது. நரியே, நீ ஏன் வருத்தப்படுகிறாய்? நாம் விருந்துண்ணப்போகும் வேளையில் நீ எதற்காக வருந்த வேண்டும்?” என்று புலி கேட்டது. அதற்கு நரி “காலம் கெட்டு விட்டது. பலவானாகிய உம்மைப்பற்றி எதற்கும் உதவாத எலி என்ன சொல்லிற்று தெரியுமா? நான் மானைக் கடித்ததால்தானே, புலியினால் அந்த மானை அடித்து வீழ்த்த முடிந்தது. என் பலத்தினால் புலி இன்று தன் பசியைத் தீர்த்துக்கொள்ளப்போகிறது. அதற்கு வெட்கமுமில்லை, ரோஷமுமில்லை. இப்படி எலி கூறிவிட்டது. உமக்கு நேர்ந்த இந்த அவமானத்தை நினைத்துத்தான் நான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.!” இப்படி நரி கூறியவுடன் புலி, “இது எனக்கு மிகப்பெரிய அவமானம். இந்த மானை நான் புசிக்கப்போவதில்லை. இனி, நானே முழுவதும் என் முயற்சியால் வீழ்த்தும் மிருகங்களைத்தான் நான் புசிப்பேன். எலி போன்ற கேவலமான ஜந்துவிடம் அவச்சொல் வாங்கிப் பசியாற்றவேண்டிய அவசியம் எனக்கில்லை என்று கூறிக் கோபமாகச் சென்று விட்டது.

அதற்கு பின்னர் எலி அங்கே வந்தது. அதனிடம் நரி, இந்த மானை நான் புசிக்கப் போவதில்லை. புலியின் நகங்கள் பட்டதால் இதில் விஷம் ஏறியிருக்கிறது என்று கூறி, அதனால் இதைப் புசிக்க மறுத்துச்சென்றுவிட்டது கீரி. கீரியின் வார்த்தையைக் கேட்ட பிறகு எனக்கு அதைப் புசிக்க மனமில்லை. நீயும் ஜாக்கிரதையாக இரு. ஏனென்றால், இந்த மானைப் புசிக்க மனமில்லாத கீரி தன் பசியைத் தீர்த்துக்கொள்ள உன்னைததான் குறி வைத்திருக்கிறது. இதை நான் உன்னிடம் சொல்லி விட்டது கீரிக்குத் தெரிய வேண்டாம்.” இப்படி நரி கூறியவுடன் தன்னைக் காப்பாற்றி கொண்டால் போதும் என்று எலி ஓடி விட்டது.

அடுத்து ஓநாய் வந்தது. நரி அதனிடம், “ஓநாயே ! ஒரு ரகசியம் சொல்கிறேன். புலி உன்மீது மிகவும் கோபமாக இருக்கிறது. தன் மனைவியை அழைத்து வர புலி போயிருக்கிறது. இன்று உன் கதையை முடிக்கப்போகிறதாம் அது. அதனால் நீ இந்த மானைப் புசித்துவிட்டு ஓடிவிடு!” என்று கூறியது. மானைப்புசித்துக் கொண்டிருந்தால் நேரமும் வீணாகும், புலியின் கோபமும் அதிகரிக்கும் என்று எண்ணி பயந்த ஓநாய் பிழைத்தால் போதும் என்று அங்கிருந்து விரைந்து சென்று விட்டது.

இறுதியாக கீரி வந்தது. அதனிடம்



குருப்ரியா

நரி, “வா ! உனக்காகத்தான் காத்திருக்கிறேன். நான் பாய்ந்து குதறியதைத் தாங்க முடியாமல் ஓநாயும், புலியும், எலியும், ஓடிவிட்டன. நீ ஒருவன்தான் மீதமிருக்கிறாய். உன்னால் முடியுமென்றால் என்னுடன் சண்டையிட்டு ஜெயித்து இந்த மானைப் புசித்துக்கொள்!” என்று சவால் விட்டது. கீரி, பலமுள்ள புலி, கோபமுள்ள ஓநாய் புத்தியுள்ள எலி எல்லோருமே உன் தந்திரமான தாக்குதலில் காயப்பட்டு ஓடியிருக்கும்போது, எனக்கு மட்டும் ஏன் தொந்தரவு? நீயே இந்த மானைப் புசித்துக்கொள்” என்று கூறிச் சென்றுவிட்டது. கீரி, அதன்பிறகு தன்னுடைய தந்திரம் பலித்ததை எண்ணி மகிழ்ந்து கொண்டு தனியாகவே அந்த மானைப் புசித்தது நரி. அரசர்களும் இப்படித்தான் நடந்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு எதிரியை வீழ்த்த ஒவ்வொரு வழிமுறை தேவைப்படும். கோழைகளை பயத்தினாலும், தைரியசாலிகளை தந்திரத்தினாலும் வெல்ல வேண்டும். பேராசைக்காரர்களை பொருளினால் வெல்ல வேண்டும். தனக்குக் கீழானவர்களைப் பலத்தைக் காட்டியே ஒடுக்கவேண்டும். விதுரர் மேலும் தொடர்ந்தார்: “ யாரிடமும் முழு நம்பிக்கை வைத்துவிடக்கூடாது. முழுமையாக உன்னால் நம்பப்படுகிறவன் எதிரியாக மாறினால், அதனால் உனக்கு அழிவு ஏற்படும். ஆகையால் எவர்மீதுமே முழு நம்பிக்கை வைத்துவிடக்கூடாது” என்கிறார் விதுரர்.

விதுரர் கூறியதை வைத்துப்பார்க்கும்போது, இவ்வுலகில் வாழும் மனிதர்களின் மனம் எவ்வாறானது என்பது யாருக்கும் தெரியாது. நரியைப் போன்று தந்திரமாக இருப்பவர்கள்தான் இவ்வுலகில் அதிகமும். அதனால் நாம் யாரிடமும் முழு நம்பிக்கை வைப்பது ஆபத்தை விளைவிக்கும். ஒரே ஒருவரிடத்தில் மடும்தான் முழுமையான நம்பிக்கை வைத்துக்கொள்ளவேண்டும். அந்த ‘ஒருவர்’ யாரெனில் அது இறைவனேயாகும். அவனிடத்தில் முழுமையான நம்பிக்கையும் விசுவாசமும் வைத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். அவன் ஒருவன் மட்டும்தான் தாயாக, தந்தையாக, நண்பனாக மற்ற எல்லா உறவுகளுமாக இருக்கிறான். அவ்வாறானவர்கள் உண்மையான அன்பையும் நட்பையும் கொடுப்பார்கள். அதை நாம் அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அதை மனதார ஏற்று, நம்பி அவனுடன் (இறைவனுடன்) வாழுவோம்!.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**



**தொடர்பு கொள்ள வேண்டிய எண்:**

# 9444228203

# வறட்டு இருமலை போக்கும் வழிமுறைகள்

இருமல், ஜலதோஷம் மற்றும் தொண்டைப் புண்களுக்கு, பார்லி அரிசியை சிறிது நீர் விட்டுக் கொதிக்க வைத்து, அப்படியே இறக்கி வைத்து விட்டால், தெளிந்த நீர் கிடைக்கும். இந்த நீருடன் இரண்டு கரண்டி தேன் கலந்து சாப்பிட இருமல், ஜலதோஷம் குறையும். தொண்டைப் புண்ணும் ஆறும். மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட குணம் தெரியும்.

• • •

பலாச்சுளையை தேனில் நனைத்துச் சாப்பிட்டால், இருமல் போய்விடும். இரண்டு சிட்டிகை சித்தரத்தைப் பொடி, கொஞ்சம் கல்கண்டு பொடி, 1 ஸ்பூன் நெய், மூன்றையும் குழைத்துச் சாப்பிட, வறட்டு இருமலுக்கு மிகவும் நல்லது. வெந்நீரில் தேன் கலந்து குடித்தால், ஜலதோஷம், இளைப்பு, நுரையீரலில் உள்ள சளி நீங்கி விடும்.

• • •

வால்மிளகு 10, அதிமதுரம் 2 செ.மீ, சித்தரத்தை 2 செமீ, திப்பிலி, துளசி இலை 15 போட்டு அவித்து சாறு எடுத்துக் கொண்டு பனங்கற்கண்டுடன் ஒரு நாளைக்கு மூன்று வேளை வீதம் அருந்தவும். இருமலுக்கு மிகவும் நல்லது. மூன்று சொட்டு இஞ்சிச்சாறுடன் தேன் கலந்து சிறு குழந்தைகளுக்குப் புகட்டினால் கக்குவான் இருமல் நிற்கும்.

• • •

தாங்க முடியாத அடுக்கு இருமலுக்கு முருங்கைக் கீரையை உப்பு சேர்த்து உள்ளங் கையில் கசக்கவும். சிறிது சுண்ணாம்பு சேர்த்து தொண்டையில் தடவினால் இருமல் குறையும். அரிசித்திப்பிலியை கடாயில் போட்டு வறுத்துப் பொடி செய்து வைக்கவும். சதா இருமும் குழந்தைகள், பெரியவர்கள் யாரும் இதை உட் கொள்ளலாம். ஒரு டீ ஸ்பூன் பொடியில் சிறிது தேன் விட்டுக் குழைத்து ஒரு கிண்ணத்தில் வைத்துக் கொள்ளவும்.

• • •

இதை, காம்பு நீக்கிய வெற்றிலையின் நடுவில் அரை ஸ்பூன் வைத்து, வாயில் போட்டு வெற்றிலைச் சாறுடன் சேர்த்து சிறிது சிறிதாக சிறிது நேரம் வாயில் அடக்கிக் கொண்டு சாப்பிட்டால் இருமல் குறையும். துளசிச் சாறையும் கல்கண்டையும் கலந்து சர்பத் போலக் காய்ச்சி வைத்துக் கொள்ளுங்கள். வயதுக்குத் தகுந்தபடி இந்த துளசி சர்ப்பத்தை சிறிதளவு எடுத்து 2 அல்லது 3 தடவைகள் சாப்பிட இருமல் குண மாகும்.

• • •

வறட்டு இருமலால் அவதிப்படுவோர் அதிமதுர வேரினை அவ்வப்போது 1 துண்டு வாயிலிட்டு சுவைத்து வருவது நல்லது. கண்டங்கத்திரி, தூதுவளை, ஆடாதொடை, துளசி இவைகளின் இலை வகைக்கு 1 படி, சித்தரத்தை 1 துண்டு, இஞ்சி 1 துண்டு சேர்த்து இடித்துப் பிழிந்த சாறு 10 முதல் 20 துளி வரையில் வெண்ணையில் கலந்து காலை, மாலை கொடுத்து வர ஓயாத இருமல் நீங்கும். கபக்கட்டு, சிறுபிள்ளைகளுக்குக் காணும் கணைச்சூடு விலகும்.

• • •



www.aanmeegamalar.com

# குளிச்சிடுவேன்னு பயந்தியா மந்திர ஸ்நானம் செய்துக்கிட்டேன்

## கண் மருத்துவர் பத்ரிநாத்தை வியக்க வைத்த சம்பவம்



அது 1974ஆம் ஆண்டு... காஞ்சி மகா பெரிய வாளுக்கு ஒரு கண்ணில் பார்வை பழுதுபட்டது. கிட்டத்தட்ட ஒரு கண்ணின் பார்வை இன்றியே தன் நித்ய அனுஷ்டானங்களைத் தொடர்ந்து வந்தார். தேகத்தில் ஏற்படும் மாற்றங்கள் மகான்களுக்கு ஒரு பொருட்டல்ல. அதற்கேற்றாற்போல் அவரது செயல்பாடுகளில் எந்த ஒரு மாறுதலும் இல்லை. இருந்தாலும் சில அன்பர்களது வற்புறுத்தலுக்குப் பிறகு பாதிக்கப்பட்ட கண்ணுக்கு ஒருகட்டத்தில் சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அது போதிய பலன் தர வில்லை. அத்தோடு, பாதிக்கப்பட்ட அந்த கண்ணில் மேற்கொண்டு எந்த சிகிச்சையும் செய்ய இய லாது... அது பலன் தராது என்கிற நிலையும் ஏற்பட்டது. இந்த நிலையில் இன்னொரு கண்ணின் உதவியுடனேயே இருந்து வந்தார் மஹா பெரியவா.

நாளடைவில் நன்றாகச் செயல்பட்ட அந்த இன்னொரு கண்ணிலும் கேட்ராக்ட் (புரை) ஏற்பட்டது. இதை அறிந்த பெரியவாளின் அணுக்கத் தொண்டர்களும் ஸ்ரீமடத்து விசுவாசிகள் பலரும் பெரியவாளை அணுகி, 'கேட்ராக்ட்டுக்குப் பெரியவா ஏதாவது சிகிச்சை எடுத்துக்கணும்' என்று விக்ஞாபித்துக் கொண்டனர்.

புன்னகையுடன் அந்தக் கோரிக்கையை மறுத்து விட்டார் பெரியவா. 'போதும்டா...இந்த ஒரு கண்ணை வெச்சுண்டே நான் சந்திர மௌலீஸ்வரர் பூஜையை நடத்திக்கிறேன். இந்தப் பார்வையே எனக்குப் போதும்' என்று அன்புடன் மறுத்துவிட்டார். ஆனால் மஹா பெரியவாளின் இந்த சமாதானமான பதிலை ஸ்ரீஜயேந்திரர் ஏற்கவில்லை. கேட்ராக்ட்டுக்கு அவசியம் ஆப்ரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்று பெரியவாளிடம் வற்புறுத்துக் கொண்டே வந்தார். ஒரு கட்டத்தில் பெரியவாளும் இதற்கு சம்மதித்தார்.

அப்போது மயிலாப்பூரில் பிரபல வக்கீலாக இருந்த கிருஷ்ணமூர்த்தி என்பவர் மூலம் டாக்டர் பத்ரிநாத் மஹாபெரியவாளுக்கு அறிமுகம் ஆனது இந்த நேரத்தில் தான். சென்னையில் ஒரு தனியார் மருத்துவமனையில் பணியில் இருந்தார் பத்ரிநாத். இவரது சேவை மனப்பான்மை பற்றியும், தொழில் நேர்த்தி குறித்தும் ஸ்ரீமடத்துக்கு சிபாரிசு செய்யப்பட்டது. ஸ்ரீமடத்து அதிகாரிகள் கலந்தாலோசித்த பிறகு பத்ரிநாத்தைக் கொண்டே மஹாபெரியவாளுக்கு கேட்ராக்ட் ஆப்ரேஷன் செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

முதலில் ஸ்ரீஜயேந்திரரைச் சந்தித்த பத்ரிநாத் பெரியவாளுக்கு எப்படி ஆப்ரேஷன் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை விளக்கினார். 'ஒரு சந்நியாசிக்கு மருத்துவமனையில் வைத்தெல்லாம் சிகிச்சை செய்யக் கூடாது. அது போல் நர்ஸ், மருத்துவ உதவியாளர்கள் போன்றோரின் ஸ்பரிசம் பெரியவாளின் மேல் படவே கூடாது' என்றெல்லாம் சில விஷயங்கள் ஸ்ரீமடத்தின் சார்பில் பத்ரிநாத் முன் வைக்கப்பட்டது. அனைத்தையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்ட அவர், 'நானும் மகா ஸ்வாமிகளின் பக்தன் தான். அவரது துறவற வாழ்க்கைக்கு எந்த ஒரு பங்கமும் ஏற்படாதவாறு இதைப் பார்த்துக் கொள்கிறேன்.' என்றார் மென்மையாக.

ஆப்ரேஷன் சமயத்தில் பத்ரிநாத் மட்டுமே மருத்துவர் என்ற முறையில் இருந்தார். இவரைத் தவிர, மருத்துவமனை சிப்பந்திகள் எவரும் இந்த




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

சிகிச்சையின் போது உடன் இல்லை. அப்படி என்றால், டாக்டர் பத்ரிநாத்துக்கு ஆப்ரேஷன் நேரத்தில் உதவியவர்கள் யார்?

மஹா பெரியவாளின் அணுக்கத் தொண்டர் கள் சிலருக்கே தேவையான மருத்துவப் பயிற்சி கொடுத்து, அவர்களைத் தன் உதவியாளர்களாக ஆக்கிக் கொண்டார் பத்ரிநாத். காஞ்சிபுரத்தில் உள்ள ஒரு கல்யாண மண்டபம், ஆப்ரேஷன் தியேட்டராக மாற்றப்பட்டது. ஆப்ரேஷனுக்கு தேவையான அனைத்து விதமான உபகரணங்களும் சென்னையில் இருந்தே கொண்டு வரப்பட்டன. எல்லாம் தயார் ஆனபின், மிகக் கச்சிதமாக மஹாபெரியவாளுக்கு ஆப்ரேஷன் முடிந்தது.

ஆப்ரேஷன் முடிந்து விட்டாலும் மஹா பெரியவாளின் (ஆப்ரேஷன் செய்த) அந்தக் கண்ணைத் தினமும் கண்காணிக்க வேண்டுமே! இதற்காக தினமும் அதிகாலை வேளையில் சென்னையில் இருந்து புறப்பட்டு, காஞ்சிபுரம் வந்து மஹாபெரியவளின் கண்ணைப் பரிசோதித்துவிட்டு வேண்டிய மருந்துகளை அப்ளை செய்து டிரஸ்ஸிங் செய்து விட்டு சென்னைக்குத் திரும்புவார் டாக்டர் பத்ரிநாத். இது தினசரி நடந்து கொண்டிருந்தது.

அன்றைய தினம் கிரஹணம். யதேச்சையாக இது தெரிய வந்ததும், டாக்டர் பத்ர்நாத் பதறிவிட்டார். பொதுவாக கிரகண காலம் முடிந்ததும், ஸ்நானம் செய்வது இந்துக்களின் வழக்கம். அதுவும் சந்நியாசிகள் இன்னும் அனுஷ்டானமாக இருப்பார்கள். 'ஒரு வேளை பெரியவா கிரஹண காலம் முடிந்ததும், கண் ஆப்ரேஷன் செய்ததைக் கருத்தில் கொள்ளாமல் குளிக்கப் போய்விட்டால்....? என்று சுளீரென உறைத்தது பத்ரிநாத்துக்கு. அவ்வளவு தான்... இயல்பாகத் தான் காஞ்சிபுரம் புறப்படும் வேளைக்கு முன்பாகவே ஒரு காரில் காஞ்சியை நோக்கி அரக்கப் பரக்கப் பயணித்தார்.

ஸ்ரீமடத்தின் வாசலில் போய்த்தான் கார் நின்றது. 'சாதாரணமாக வரும் நேரத்தை விட இன்று இவர் ஏன் இத்தனை சீக்கிரமாக ஸ்ரீமடத்துக்கு வந் திருக்கிறார்? அதுவும் பொழுது இன்னும் புலராத வேளையில் இவ்வளவு அவசரமாக வரவேண்டியதன் அவசியம் என்ன? என்று ஸ்ரீமடத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் குழம்பினார்கள்.

ஸ்ரீமடத்து அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு



மகாபெரியவா முன் படபடப்புடன் போய் நின்றார் பத்ரிநாத். சாஷ்டாங்கமாக ஒரு நமஸ்காரம் செய்தார். பிறகு பெரியவாளையே பார்த்துக் கொண்டு அமைதியாக நின்றார். தான் எதற்காக இப்படி பதைபதைத்து வந்தேன் என்பதற்கான காரணத்தை இன்னும் அவர் சொல்லக் கூட இல்லை.

அதற்கு முன்னதாக பெரியவா அவரை ஆசிர்வதித்து விட்டுப் புன்னகையுடன் திருவாய் மலர்ந்தார். 'என்ன குளிச்சிடுவேன்னு பயந்தியா?"

பத்ரிநாத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. எதை நினைத்துக் கொண்டு சென்னையில் இருந்து ஓடி வந்தாரோ அதைப் பட்டென்று உடைத்து விட்டார் பெரியவா. 'ஆமா பெரியவா. இப்பதான் கண் ஆபரேஷன் ஆகி இருக்கு. இந்த நிலைல கிரஹண காலத்தை உத்தேசிக்க ஸ்நானம் பண்ணினா, ஆபரேஷன் ஆன கண்ணுக்கு ஏதேனும் ப்ராப்ளம் வந்துடுமோன்னு கவலையா இருந்தது.

அதான், ஸ்நானம் பண்ண வேண்டாம்னு பெரியவாகிட்ட பிரார்த்திக்கிறதுக்காக அவசர அவசரமா ஓடோடி வந்தேன்' என்றார் படபடப்பு அடங்காமல்.

பத்ரிநாத்தை அர்த்த புஷ்டியுடன் கூர்ந்து பார்த்த மஹாபெரியவா 'கிரஹணம் கழிந்தவுடனே ஸ்நானம் பண்ணனும்னு தான் சாஸ்திரம் சொல்றது. ஆனா நான் ஸ்நானம் செய்யலை. அப்படின்னா அந்த கிரஹணத் தீட்டு எப்படிப் போச்சுன்னு யோசிக்கிறயா?

சாஸ்திரத்துல மந்திர ஸ்நானம்னு ஒண்ணு இருக்கு. அந்த முறைப்படி நான் ஸ்நானம் பண்ணிக்கிறேன். என் கண் பார்வை போயிடுமோங்கிற பயத்துல நான் ஸ்நானம் பண்ணாம இல்லை. யூ ஆர் எ பட்டிங் டாக்டர் (வளர்ந்து வருகிற மருத்துவர்). உன்னோட வளர்ச்சி எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படக் கூடாது. அதுக்காகத்தான் நான் மந்திர ஸ்நானத்தை ஏத்துண்டேன்'... என்று சொல்ல.....கண்கள் கலங்கி, அந்த மகானின் திருப்பாதங்களுக்கு இன்னொரு முறை சாஷ்டங்க நமஸ்காரம் செய்தார் டாக்டர் பத்ரிநாத்.

மஹாபெரியவாளின் தரிசனம் பெற்றாலே பெரும் பாக்கியம். அதுவும் அவருடைய திருமேனியைத் தீண்டி, கண் ஆப்ரேஷன் செய்தார் என்றால், டாக்டர் பத்ரிநாத்துக்கு எப்பேர்ப்பட்ட பாக்கியம் அமைந்திருக்க வேண்டும்?!

பின்னாளில் காஞ்சி ஸ்ரீசங்கரமடத்தின் மூலம் 'மெடிக்கல் ரிசர்ச் ஃபவுண்டேஷன்' (சங்கர நேத்ராலயா) என்கிற அமைப்பு துவங்கும் போது டாக்டர் பத்ரிநாத் இதன் தலைமைப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அமைப்பின் தலைவராகவும் நிறுவனராகவும் தற்போது இருந்து வருபவர் இவர்.

நன்றி– தெய்வத்தின் குரல்

1000 அஸ்வமேத யாகம் செய்த பலன்தரும்

# துளசி மாலை

சபரிமலைக்கு சென்று ஐயப்பனை தரிசிக்க செல்லும் பக்தர்கள் ருத்ராட்ச மாலையும், துளசி மாலையும் அணிந்து விரதமிருந்து செல்வார்கள். சிவனும் பெருமாளும் இணைந்து ஒரு மாபெரும் சக்தியாக உருவானவர் ஐயப்பன். இதில் ருத்ராட்சம் என்பது சிவனின் சின்னமாகும். துளசி என்பது பெருமாளுக்கு மிகவும் பிடித்தமானது. இது தவிர, துளசியின் கதையில் துளசியிடம் மஹாலட்சுமி வாசம் செய்கிறாள். ஆகையால் மலைக்குப் போகும் பக்தர்களுக்கு ஐஸ்வர்யம், சுபீட்சம் கிடைக்கும் என நம்பிக்கையும் உண்டு.

கார்த்திகை மாதத்தில் தொடங்கி, தை மாதம் வரை குளிர் இருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். இந்தத் துளசிக்கு உஷ்ணம் கொடுக்கும் தன்மை உண்டு. சளி, ஜலதோஷம் என்றால் துளசி கஷாயம் சாப்பிடுவது வழக்கம். ஐயப்ப பக்தர்கள், உடலில் வெப்பம் கொடுக்கத்தான் இந்தத் துளசி மாலையை அணிகின்றனர்.

கண்ணன் துளசி மாலை அணிந்திருப்பான். விஷத்தை முறித்து, உடலுக்கு வெப்பத்தை தரும் சக்தி துளசிக்கு உண்டு. கண்ணன் நாகங்களுடன் விளையாடுபவன். ஐந்து தலை நாகத்தின் மீதேறி நடனம் ஆடியவன். குளிர்ந்த மேனியன். எனவே தான், கண்ணன் துளசி மாலை அணிந்து கொள்வான். துளசி மாலை அணிந்தோ, துளசி மாலையை கையில் பிடித்தோ பூஜிப்பவர்களுக்கு, 1000 அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கு

# திருசூலத்தின் மூன்று கிளைகளின் சிறப்பு

சிவபெருமானுக்குரிய படைக்கலங்களுள் முதன்மை பெற்றது சூலமாகும். அது தலைப்பகுதியில் மூன்று கூர்மையான பகுதிகளைக் கொண்டிருப்பதால் முத்தலைச் சூலம் என்றும் திரிசூலம் என்றும் அழைக்கப்படுகின்றது.

சூலத்தை ஏந்தி நின்று அருள்புரிவதால் சிவபெருமான் சூலபாணி என்றும், சூலதரர் என்றும் அழைக்கப்படுகிறார். திரிசூலம், உயிர்களைப் பற்றியுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை நீக்கி அவற்றிற்கு மோட்சத்தை அருள்கிறது. அது ஞானத்தை வழங்குவதாகவும் உள்ளது. அஸ்திரங்களுக்கு எல்லாம் தலைவனாக இருப்பதால் அதனை அஸ்திர ராஜன் எனவும் அழைப்பர்.

பகைவர்களை வென்று சுகமாக வாழவும், ஞானத்தினைப் பெற்று மகிழ்ச்சியாக வாழவும், திரிசூலத்தைச் சிவபெருமானாகவே போற்றி வழிபடுகின்றனர். இந்த விரதத்தால் மனதில் மகிழ்ச்சி உண்டாகும். கண்ணுக்குப் புலனாகாத பகை விலகும். பொன்னால் திரிசூலத்தைச் செய்து, அதைச் சுற்றிலும் எட்டுத் திசைகளிலும் அஷ்டாயுதங்களை நிலைப் படுத்தி அஸ்திர பூஜை செய் வர். அத்தி மரத்தாலும், கருங்காலி மரத்தாலும் சூலங்களைச் செய்து வழிபடுகின்றனர்.


www.aanmeegamalar.com

சூலத்தின் மையத் தில் மூன்று கிளைகளில் சிவபெருமானையும் இடது கிளையில் திருமாலையும்வலது கிளையில் பிரம்ம தேவனையும், மூன்றும் கூடுமிடத்தில் விநாயகர்,முருகன், வீரபத்திரர், சாத்தன் ஆகியோ ரையும் அதன் கீழுள்ள கண்டத்தில் ஏகாதச ருத்திரர்களையும், அதன் கீழுள்ள பத்மத் தில் அஷ்டமாத்ருகா, அஷ்டலட்சுமிகள் ஆகியோரையும் பூஜிக்கின்றனர்.

திரிசூல வழிபாடு இல்லறத்தாருக்குப் பாதுகாப்பையும் செல்வத்தையும் அருள்கின்றது. அழிவிலிருந்து காப்பாற்றுகிறது. காசி நகருக்கு அவிமுத்தம் என்று பெயர் வழங்குகிறது. இதற்கு அழிவற்றது என்பது பொருள். இந்த தலத்தைத் திரிசூலம் தாங்கிக் கொண்டிருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

சூலாயுதத்தைத் தனியாக வழிபடுவதற்குப் பதில் சந்திரசேகரர் திருவுருவத்தில் சார்த்தி வைத்து வழிபடுவதும் உண்டு. திரிசூல விரதத்தை விரத மகாத்மியம் சிறப்புடன் விளக்குகிறது. சிவாலயங்களில் இவரை முதன்மை மூர்த்தியாகக் கொள்வர். கொடியேற்றம், கொடியிறக்கம் இவர் முன்பாகவே நடைபெறும். தீர்த்தவாரியில் நீருள் மூழ்கித் தீர்த்தம் அளிப்பவரும் இவரே.

தினமும் ஸ்ரீபலி நாயகரைக்கொண்டு செய்யப்படும் ஸ்ரீபலி உற்சவம் பெருந்திருவிழாக் களில் சூலதேவரை வைத்துக் கொண்டே செய்யப்படுகின்றது. பெருந்திருவிழாவில் சுவாமி புறப்பாட்டிற்கு முன்பாகத் திரிசூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. இதனைப் படை வலம் செய்தல்என்பர். திரிசூலத்தைச்சிவபெருமானாகவே போற்றுகின்றனர். சில ஆலயங்களில் திரிசூலத்தின் முன்புறம் உமாமகேஸ்வரர் அர்த்தநாரீஸ்வரர், ரிஷபாரூடர் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமிய தெய்வமான பிடாரி ஆலயங்களிலும் திரிசூலமே படைக்கலமாக உள்ளது. அதன் நடுவில் காளியின் உருவம் அமைக்கப்படுகின்றது. திரிசூலத்தை மிகப் பழங்காலந்தொட்டே காவலின் சின்னமாக போற்றி வருகின்றனர்.

# பிரச்சனை தீர்க்கும் வெற்றிலை வழிபாடு

**மேஷம்:** வெற்றிலையில் மாம்பழம் வைத்து செவ்வாய் கிழமை முருகனை வழிபட்டு சாப்பிட துன்பங்கள் அகலும்.

**ரிஷபம்:** வெற்றிலையில் மிளகு வைத்து செவ்வாய்கிழமை ராகுவை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும்.

**மிதுனம்:** வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து புதன்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் விலகும்.

**கடகம்:** வெற்றிலையில் மாதுளம்பழம் வைத்து வெள்ளிக் கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷடம் விலகும்.

**சிம்மம்:** வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கஷடம் விலகும்.

**கன்னி:** வெற்றிலையில் மிளகு வைத்து வியாழக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும்.

**துலாம்:** வெற்றிலையில் கிராம்பு வைத்து வெள்ளிக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துன்பம் தீரும்.

**விருச்சிகம்:** வெற்றிலையில் பேரிச்சம்பழம் வைத்து செவ்வாய் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துயரம் தீரும்.

**தனுசு:** வெற்றிலையில் கற்கண்டு வைத்து வியாழன்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**மகரம்:** வெற்றிலையில் அச்சு வெல்லம் வைத்து சனிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**கும்பம்:** வெற்றிலையில் நெய் வைத்து சனிகிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**மீனம்:** வெற்றிலையில் சர்க்கரை வைத்து ஞாயிற்றுக்கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் நோய் தீரும்.



# ராசி பலன்கள்

## 16.07.2021 முதல் 31.07.2021 வரை




### மேஷம்

ஆடி 5ம் தேதி ராசிநாதன் செவ்வாய் கடக ராசியில் இருந்து சிம்மராசி செல்வது மிகவும் நல்லது. குரு பார்வை பெறுவதால் அதுவரை இருந்த இன்னல் நீங்கி நன்மை அதிகம் பெறுவார்கள். படிப்பில் முன்னேற்றம், பதவியில்முன்னேற்றம் ஏற்படும். திருமண பாக்கியம் கைகூடும். வியா பாரத்தில் அதிக முன்னேற்றம் ஏற்படும். சிலர் புதுவித வியாபாரம் தொடங்க நல்ல நேரம் கை கூடி வரும். உடல் நலம் சீராகும்.

### ரிஷபம்

ராசிக்கு சப்தமாதிபதி செவ் வாய் குரு பார்வை பெறும் நேரம் சிறப்பாக யோக நேரம், திருமண தடை அகலும். பிரிந்த தம்பதிகள் ஒன்றுசேர் வார்கள். வேலையில் அதிக கவனமாக இருக்கவும். கடன் கேட்ட இடத்தில் சுலபமாக கிடைக்கும். பழைய கடன் அடைபடும். தடைப்பட்ட மேல்படிப்பு சிறப்பாக தொடர வாய்ப்பு ஏற்படும். வெகுநாட்கள் குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகள் சிறந்த மருத்துவர் உதவியுடன் நல்ல குழந்தை பெறுவார்கள்.

### மிதுனம்:

ராசியை குரு பார்ப்பதும் லாப ஸ்தானாதிபதி செவ்வாய் குரு பார்வை பெறுவதும் சிறப் பாகும். திருமண பாக்கியம், புத்திர பாக்கியம் ஏற்படும். உத்யோகத்தில் பதவி உயர்வு பெற்று விரும்பிய இடம்மாற்றம் பெற்று சந்தோஷமாக இருப்பார்கள். புதியதாக வேலைக்கு காத்திருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். நீண்ட நாள் வழக்கு சாதகமான தீர்ப்பாகும்.

### கடகம்

ராசியில் நீச்சம் பெற்று இருந்த அங்காரகன் 5ம் தேதி மாறுவதால் நன்மைகள் அதிகமாகும். 9,10ம் அதிபதி குரு செவ்வாய் பார்வையில்

குரு மங்கள யோகமும், தர்ம கர்மாதிபதி யோக மும் பெற்று பதவியில் நல்ல புகழ், மாற்றம் தரப்போகிறார். பண புழக்கம் அதிகமாகும். தேவையான செலவு அதிகமானாலும் வருமானம் அதிகமாகும். மகிழ்ச்சியான வாழ்க்கை இனிதே தொடரும்.

## சிம்மம்

சனியினை குரு பார்ப்பதால் இதுவரை இருந்த கஷ்டம் இனி இருக்காது. ராசிஅதி பதி சூரியன் 12ல் மறைந்துள் ளதால் எதிலும் கவனம் தேவை. வேலையில் இருப்பவர்கள் கவனமாக இருக்கவும். இனி தூக்கம் சரியாக இருக்க வேண்டும். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உடல் நலம் பாதித்து மருத்துவ சிகிச்சை பெறுபவர்கள் கவனமாக இருக்கவும். அலைச்சலை குறைத்துக் கொள் ளவும்.

## கன்னி

பூர்வ புண்ய ஸ்னாதிபதி ராசி அதிபதியும்ஆட்சி பெற்று வலுவாக உள்ளனர். வேலை பளு குறைந்து நல்ல இடம் மாற்றம் பெற்று சந்தோஷ மாக இருப்பார்கள். வெளிநாட்டில் மேல் படிப் பிற்காக காத்திருக்கும் சில மாணவர்கள் நல்ல வாய்ப்பு பெற்று வெளிநாடு சென்று நிம்மதியாக இருப்பார்கள். சிலர் அங்கேயே படிப்பு முடித்து நல்ல வேலை கிடைத்து நிம்மதியான வாழ்க் கையை தொடருவார்கள்.

## துலாம்

4,5ம் அதிபதி சனி பகவான் ஆட்சி பெற்றதும் பாக்ய ஸ்னா திபதி புதன் ஆட்சி பெற்றதும் குரு 5ல் உள்ளதும் சிறப்பான யோக நேரமாகும். திருமண பாக்கியம், புத்திர பாக்கியம் சிறப் பாக உள்ளது. யாருடனும் தேவையில்லாத வாக்குவாதம் வேண்டாம். பணம் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. 7ம் அதிபதி செவ் வாய் சிம்மராசி மாறும் நேரம் நன்மை பல மடங்கு அதிகமாகும்.

## விருச்சிகம்

ராசி அதிபதி செவ்வாய் 5ம் தேதி மாறும் நேரம் இதுவரை இருந்த தலைவலி இனி வராது. உடன் பிறந்த வர்களால் ஏற்பட்ட பிரச்சனை குறையும். கடன் அடைபடும். பண வருமானம் அதிகமாகும். கணவன், மனைவி ஒற்றுமையாக இருக்கவும், தேவையில்லாத கருத்து வேறுபாடு கூடாது. இதுவரை இருந்த உடல் நல பாதிப்பு சீராகும். தேவையில்லாத கருத்து வேறுபாடு தவிர்க்கவும்.

## தனுசு

ராசிக்கு 5ம் அதிபதி அங்கார கன் மாற்றம் பெற்றவுடன் இந்த ராசியிலுள்ள உள்ள வர்கள் அவர்களின் குழந்தைகளுக்கு உள்ள பிரச்சனை தீரும். இதுவரை இருந்த பிரச்சனை தீர்வாகும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் நல்ல மருத்துவர் ஆலோசனையுடன் குழந்தை பாக்கியம் ஏற்படும். கண் தோல் பிரச்சனை வராமல் பார்த்துக் கொள்ளவும்.

## மகரம்

ராசி அதிபதி சனி பகவான் ஆட்சி பெற்றதும் 2ல் குரு பகவான் இருப்பதும் சக பாக்யஸ்தாதிபதி செவ்வாய் மாறுவதும் சிறப்பான மாற்றம் ஏற் படுத்தும். தேவையற்ற கருத்து வேறுபாடு அகலும். உடல் நலம் சிறப்பாகும். தன வருமானம் அதிகமாகும். தாய் தந்தையின் பிரச்சனை அகலும். சிலருக்கு சௌகர்யமான இடம் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

## கும்பம்

1, 12ம் அதிபதி சனி பக வான் ஆட்சி பெற்றதும் ராசி யிலுள்ள குரு 5, 7, 9ம் இடம் பார்ப்பதும், பூர்வ புண்ய ஸ்தானாதிபதி புதன் ஆட்சி பெற்றதும் சிறப்பாகும். கல்வியில் மேன்மை ஏற்படும். உத்யோகத்தில் யாரிடமும் கருத்து வேறுபாடு கூடாது. பக்கத்தில் இருப்பவனே காலை வாருவான் கவனம் யாருக்கும் சாட்சி கையெழுத்து போட வேண்டாம்.

## மீனம்

லாபஸ்தனாதிபதி சனிபகவான் ஆட்சி பெற்ற தும், 2, 9ம் அதிபதி செவ்வாய் மாற்றம் திருப்பு முனையாக இருக்கும். 4,7ம் அதிபதி புதன் ஆட்சி பெற்றதும் சிறப்பாகும். ஆட்சி பெற்றும் சிறப்பாகும். வெளிநாடு சென்று படிக்கும் மாணவர்கள் நல்ல முன்னேற்றம் பெறுவார்கள். தடைப்பட்ட வீடு சிறப்பாக கட்டி முடிக்கப்படும். சிலர் நல்ல வீடு வாங்கி குடியேறுவார்கள். உடல் நலம் சீராகும். ஏற்றம் நல்ல முன்னேற்றம்.




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# தங்களையே அடகு வைத்துக் கொண்டு அதை ஏற்க வைப்பதே மூளை சலவை

முழு அறிவு என்ற ஞானம் தலையில் திணிக்கப்பட்டே ஆக வேண்டும். இதை வழிமுறையோடு போதிப்பது முக்கியமாகிறது. பாடங்களை சிறிது சிறிதாக ஒரு மனித னின் புத்திக்குள் வைக்க முயலும்போது அது தொட்டால் உடனே நைந்துவிடும் என்பதைப் போன்ற ஒரு துல்லியமான கொடிக்கும், முளைத்து வரும் முளைக்கும் தண்ணீர் விடுவதைப் போன்றதே. உலகில் இப்படிப்பட்ட தன்மை நடந்து கொண்டு தான் இருக்கிறது. இதை செய்யும் பொழுது குருவோ அல்லது பேராசிரியரோ கட்டாயம் தனது மாணவர்களின் தன்மையை அறிந்து அளந்து தொழில்பட வேண்டும்.

❖❖❖

இத்தகைய வழிமுறைகள் திடீர் என்ற நினைவு முறையாக திணிக்கும் தன்மையினைக் கொண்டு சமய சம்பந்தமான படிப்புகளுக் கெல்லாம் உலகத்தில் பல சமயங்களுக்குள் இருக்கின்றன. ஒரு வகையில் இத்தகைய பண்பு மனிதர்களுக்கு நல்லது செய்வதாகவே அமைந்திருக்கிறது. ஆனாலும் இத்தன்மை ஒரு கானல்நீரின் வடிவத்தைக் கொண்டதே. கானல்நீர் வடிவத்தைக் கொண்ட மாயையாக மதபாடங்களையும் போதனைகளையும் படிக்கின்ற மாணவர்களின் சிந்தனை ஒருமுகமாகவே செல்லும். இது எப்படி இருக்கின்றது தெரியுமா? கடிவாளம் போட்ட குதிரை வண்டியை இழுத்துக் கொண்டு ஓட்டுகின்ற திக்கில் மட்டும் ஓடுவதைப் போன்றே இருக்கிறது.



❖❖❖

திணிக்கப்படக்கூடிய கொள்கையின் தன்மையும் அதன் ஒரே நிதானமான பலனும் ஒரு பாதையில் ஓடிச் செல்லுகின்ற சிந்தனையாகவே இருக்கிறது. ஒருவழிப்பாதை சிந்தனையை மக்கள் உடனடியாக தவிர்க்க வேண்டும்.

❖❖❖

ஒரு கொள்கையை புத்தியில் தொடர்ந்து திணிக்கும்பொழுது அது புத்தியில் எந்த ஒரு பகுதியிலும் அப்படியே நிற்பதில்லை. பின்னும் அது என்ன செய்கிறது தெரியுமா? அக்கொள்கை புத்தியில் ஏதாவது ஒரு மையம் கொண்டு அந்த நிலைத்த இடத்திலிருந்து மூளையின் பல பகுதிகளுக்கு சிறு சிறு கிளைகளாக நரம்பு கேந்திரத்தின் வழியாக பிரிகிறது. இதுபோல ஒருவழிப்பாதை தங்களது நல்ல பாதையாக கொண்டு உலகில் எல்லா கலைகளும் தங்களுக்குள் வந்து சேரும்படியாக சிலர் படிக்கிறார்கள். சிற்சில சமயங்களில் மேலே சொன்ன தன்மை உதவுகிறது.

❖❖❖

முற்றிலும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற ஒரு திடீர் சிந்தனை நமக்கு வருமானால் அதுவும் நம்மை கட்டுப்படுத்துகின்ற சிந்தனையே. இவ்விடத்தில் திணிக்கப்படுகின்ற கொள்கை முறை நம்முள் புகுந்து நமக்கு சுதந்திரத்தையும் அதையே

பிறருக்கு போதிக்கின்ற தன்மையாகவும் சொல்லி கொடுத்து நல்லதை தந்து சிந்திக்கவும் வைக்கிறது.

❖❖❖

மனிதர்களின் புத்தியினுள் எத்தகைய கொள்கையினை வைக்க முடியும் தெரியுமா? துப்பாக்கி முனையில் கூர்மையாய் செருகி வைக்கப்பட்டிருக்கின்ற கத்தி போன்று உள்ள கொள்கைகளையே நம் தலையில் வைக்க முடிகிறது. கீழே வருபவைகளை, எல்லாம் இப்படி வைக்கலாம். உண்மை, உண்மையான தொண்டு, கீழ்ப்படிந்து இருக்கின்ற நிலை, குணவானாய் இரு என்ப தெல்லாம் ஆகும். இவைகளை போதிக்க வேண்டிய அவசியமில்லை, தலையுள் நேரடியாய் திணித்தால்போதும்.

❖❖❖

மூளைச்சலவை என்றால் என்ன? இது வேறு ஒரு வகையான திணிக்கும் தன்மையே. இதன் திணிக்கும் தன்மை சிறிது சிறிதாக செய்கின்ற வேலையைப் போன்று இருக்கும். இதில் என்ன செய்கிறார்கள் தெரியுமா? ஒரு ஆண் பெண் இவர்களின் தலையிலுள்ள எல்லாவிதமான சிந்தனைகளையும் சிறிது சிறிதாக கழுவி விடுவதைப் போன்று எதிரிடையான பிரச்சாரங்களை செய்து அவைகளை முற்றிலும் அகற்றி விடுகிறார்கள். அதன்பிறகு அத்தகைய மூளை சலவை பெற்றவர்கள் தங்களது மேலாளர்களிடம் இருந்து வரும் கட்டளைகளை மட்டும் அவைகளின் நிலைமைகள் எப்படிபட்டதாய் இருந்தாலும் தங்களையே அடகு வைத்துக் கொண்டு அதை ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். இதற்கே மூளைச்சலவை என்று பெயர்.

❖❖❖

மனிதனின் மூளை ஒரு திறமையுள்ள வேலைக்காரனைப் போன்றது. அது தனது எல்லாத் திறமையிலும் எவ்வித நிலைமைகளிலும் எப்போதும் திறமையானதாகவே இருக்கின்றது. இதனால் ஒருவரின் மூளைக்குள் அந்த மனிதனின் தனி நடை உடை பாவனைகளையே திணித்து விடலாம். பிறவற்றைப் பற்றி இதில் நீங்களே மற்றவர்களை படித்தும் பிறர் சொல்லியும் தெரிந்து கொள்ளலாம்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன் நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**



# ஆடி மாதமும் கொங்கு நாட்டின் வழிபாடும்

ஆடிமாதம் வந்தாலே அம்மனுக்கு சிறப்பு கூடிவிடும், கிராமக் கோவில் முதல் நகரத்து கோவில்வரை ஆடிமாதம் சிறப்பாக கொண்டா டப்படும், இதில் கொங்கு நாட்டில் ஆடிமாதத்தை வித்தியாசமான வழிபாட்டில் கொண்டாடுவார்கள்.

வெளிமாநிலங்கள், வெளிமாவட்டங்களில் வசித்து வந்தாலும், ஆடி முதல் நாள் கொங்கு நாட்டை நாடி மக்கள் வந்துவிடுவார்கள்.

கொங்கு நாட்டின் பாரம்பரிய, கலாச்சார வழக்கப்படி ஆடி மாதத்தை வரவேற்பார்கள். கொங்குநாட்டில் ஆடி 1 பெரும்பாலும் விடுமுறை தினமாகவே இருந்து வருகிறது.

ஆடி 1 என்று அழைப்பதை விட “தேங்காய் சுடும் நோம்பி” என்று தான் கொங்கு நாட்டு மக்கள் பெரும்பாலானோர் அழைப்பார்கள்.

## தேங்காய் நோம்பி:

நல்ல முற்றிய நெற்று தேங்காயை தேர்ந் தெடுப்பார்கள். மட்டையை உறித்து, நார் போகும் வரை பாறைக்கல்லில் நன்கு உரசுவார்கள்.

பின் தேங்காயின் கண்ணில் ஓட்டை போட்டு உள்ளே இருக்கும் நீரை ஒரு குவளையில் பிடித்து வைப்பார்கள்.

அத்துளையின் வழியே, பாசிப்பயிறு, எள், வெல்லம், அவல், பச்சரிசி, பொட்டுகடலை போன்றவற்றை அதில் திணிப்பார்கள்.

பிறகு தேங்காய் நிறையும் வரை குவளையில் பிடித்த தேங்காய் நீரை அதில் ஊற்றுவார்கள்.

அடுத்ததாக, நல்ல முற்றிய அழிஞ்சி மரக்குச்சியை தேர்ந்துடுத்து அதை சீராக கூர்மை செய்து அத்தேங்காயின் ஓட்டை வழியே நன்கு இறுக்கமாக சொருகுவார்கள்.

பின் தேங்காய் மற்றும் அழிஞ்சி குச்சியை மஞ்சளால் முழுக்க பூசி, தேங்காயின் மீதுள்ள நாரின் மூலமாக தீப்பற்றி தேங்காய் எரிந்து விட கூடாது என்பதற்காக தேங்காயை கல்லில் உரசி பளப்பளப்பாக்குவார்கள்.

பச்சை அழிஞ்சிக்குச்சி எளிதில் தீ பிடிக்காது என்பதால் இதை தேர்வு செய்வார்கள்.

சொருகிய குச்சுடன் கொண்ட தேங்காயை ஊருக்கு பொதுவான இடத்தில் அல்லது வயலின் ஓரம் உள்ள கருப்பண்ணர் சாமி , முனியப்பன் சாமி இருக்கும் இடத்திற்கு எடுத்துச்சென்று,


www.aanmeegamalar.com




சாமி கும்பிட்டு தீயை மூட்டுவார்கள்.

அத்தீயில் நன்றாக அத்தேங்காயைச் சுற்றி சுற்றி சுற்றி சுடுவார்கள்.

ஒரு கட்டத்தில் தேங்காய் வெடித்து அருமையான வாசனை மூக்கை துளைக்கும். அது தான் தேங்காயும் உள்ளே இருக்கும் இடு பொருட்களும் வெந்ததற்கான அறிகுறியாகக் கொள்வார்கள்.

பின் அந்த தேங்காளை எடுத்து சாமி முன்பு படையல் வைத்து கும்பிடுவார்கள்.

கும்பிட்ட கையோடு சுட சுட தேங்காயையும், அதில் உள்ள பொருட்களையும் ஒன்றாக எடுத்து அச்சூட்டோடு பிரசாதமாக மற்றவருக்கும் கொடுத்து சாப்பிடுவார்கள்.

இவ்வாறு சுடப்படும் தேங்காயின் சுவை தேவாமிர்தத்திற்கு ஈடாக இருக்கும். கொங்கு நாட்டில் இந்த வழிபாட்டை குறிப்பாக ஆடிமாத துவக்கத்தில் செய்வார்கள்.



• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் பதியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஈசனின் சாபத்தால் உருவான ஆடி மாதமும் வேப்ப மரமும்




தமிழ் நாட்காட்டியின்படி ஆண்டின் நான்காவது மாதம் ஆடி ஆகும். சூரியன் கர்க்கடக இராசியுட் புகுந்து அதைவிட்டு வெளியேறும் வரையிலான 31 நாள், 28 நாடி, 12 விநாடி கொண்ட கால அளவே இம் மாதமாகும். வசதிக்காக இந்த மாதம் 31 நாட்களை உடையதாகக் கொள்ளப்படும்.

முற்காலத்தில் தமிழர் ஆடிப்பிறப்பைச் சிறப்பாகக் கொண்டாடுவர். தற்காலத்தில் இவ் வழக்கம் அருகிவிட்டது. இம்மாதத்தில் வரும் புதுநிலவு மறைந்த குடும்ப முன்னோர்களுக்கு ஆற்றங்கரை அல்லது கடற்கரையில் திதிக் கொடுக்கும் ஆடி அமாவாசை மற்றும் ஆறுகளில் புனல் பொங்கிவந்து ஆடிப்பட்டம் தேடி விதை விதைக்கும் திருநாளான ஆடி மாத

பதினெட்டாம் நாள் ஆடிப்பெருக்கு ஆகியன கொண்டாடப்படுகின்றன.

ஆடி மாதம் தட்சிணாயனம் (தென்திசையேகல்) ஆரம்பமாகிறது. ஆண்டினை இரண்டு அயனங்களாக (கதிர் நகர்வு) பிரிப்பர்.

ஆடி முதல் மார்கழி வரையிலான தட்சிணாயனமும், தை முதல் ஆனி வரை உத்திராயனமும் (வடதிசை நகர்தல்) ஆகும். காலைவேளையில் கதிரவன் வடகிழக்கு நோக்கி நகர்தலை விட்டு தென்கிழக்கு திசை ஏகுவான். இந்து தொன்மவியலில் இது சூரியனின் தேர் திசை திரும்புவதாக குறிப்பிடப்படுகிறது.

ஒன்று மழைக் காலத்தின் துவக்கத்தையும், மற்றொன்று கோடைக் காலத்தின் துவக்கத்தையும் குறிக்கிறது.

## ஆடி மாதம் உருவான விதம்

ஆடி என்பது ஒரு தேவமங்கையின் பெயர் என்கிறது புராணம். ஒரு சமயம் பார்வதி தேவி, ஈசனைப் பிரிந்து தவம் செய்யும் நிலை ஏற்பட்டது. சிவபெருமான் தனிமையில் இருப்பதை அறிந்த ஆடி என்னும் தேவகுல மங்கை பாம்பு உருவம் எடுத்து, கயிலையின் உள்ளே யாரும் அறியா வண்ணம் நுழைந்தாள்.

பிறகு பார்வதி தேவியாக உருமாறி சிவபெருமான் அருகில் சென்றாள். அப்போது ஒரு கசப்பான சுவையை சிவபெருமான் உணர்ந்தார். தன்னை நோக்கி வந்தவள் பார்வதி அல்ல என்பதை அறிந்து, தன் சூலாயுதத்தால் ஆடியை அழிக்க துணிந்தார். அப்போது சூலாயுதத்திலிருந்து வெளிப்பட்ட தீப்பொறி ஆடியை புனிதமடையச் செய்தது.

அவள் ஈசனை வணங்கி, ஒரு நிமிடமாவது தங்கள் அன்பான பார்வை என்மீது பட வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு நடந்துகொண்டேன். என்னை மன்னித்தருள வேண்டும் என்று வேண்டினாள். ஆனால், சிவபெருமான் என் தேவி இல்லாத சமயம் நீ அவளைப்போல வடிவம் எடுத்து வந்தது தவறு. எனவே, பூவுலகில் கசப்புச் சுவையுடைய மரமாகப் பிறப்பாய் என்றார்.

அவள் விமோசனம் கேட்க, கவலை வேண்டாம்... நீ மரமாகிப் போனாலும் ஆதிசக்தியின் அருளும் உனக்குக் கிட்டும். சக்தியை வழிபடுவதுபோல் உன்னையும் வழிபடுவார்கள்.

ஆடியாகிய உன் பெயரிலேயே ஒரு மாதம் பூலோகத்தில் அழைக்கப்படும். அந்த வேளையில் நீ கசப்பு குணம் கொண்ட மரமாக இருந்து மக்களுக்கு நல்லதைச் செய்வாய் என்று அருளினார்.

ஆடி என்ற தேவலோகத்துப் பெண் தான் பூலோகத்தில் வேப்ப மரமாகத் திகழ்கிறாள். ஈசனின் சாபமே அவளுக்கு வரமாக மாறியது. தெய்வம்சம் பொருந்திய வேம்பு ஆதிசக்தியின் அம்சமாக உள்ளது. நோய்கள் பலவற்றை குணமாக்கும் சக்தி கொண்டவளாக திகழ்ந்தாள் அந்த மங்கை.

**சங்கர நராயணன்**

ஒரு சமயம் பார்வதி சிவனிடம் ஒரு வேண்டுகோள் வைத்தார். உங்களின் தேகத்தில் பாதியை மகா



விஷ்ணுவுக்கு அளிக்க வேண்டும் என கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட சிவபெருமான் பொதிகை மலையில் தவம் இருந்தால் உனது வேண்டுகோள் நிறைவேறும் என்றார்.

பார்வதி தேவியும் ஊசி முனையில் அமர்ந்து கடும் தவம் செய்தார். இதனை கண்டு மகிழ்ச்சி அடைந்த சிவபெருமான் ஆடி பௌர்ணமி அன்று பார்வதி தேவிக்கு உத்திரம் நட்சத்திரத்தில் சங்கர நாராயணராக காட்சி தந்தார். இதனால் ஆடித்த பசு என்ற பெயரில் நெல்லை மாவட்டத்தில் இவ்விழா விமர் சையாக கொண்டாடப்படுகிறது.

கருடாழ்வார் ஆடி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தவர் ஆவார். அவரது பிறந்த தினம், "கருட பஞ் சமி" என்ற பெயரில் விரதமிருந்து கொண்டாடப்படுகிறது.

ஆண்டாள் அவதரித்தது ஆடி மாதம், பூரம் நட்சத்திரம் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் "ஆடிப்பூரம்" அன்று ஆண்டாள் அவதரித்த ஸ்ரீவில்லிப்புத்தூரில் தேரோட்டம் நடத்தப்படுகிறது.

'ஆடிப்பூரம்" நாளில் ஆண்டாளை வணங் கிடும் பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும்.

கஜேந்திரன் என்ற யானையை ஒரு முறை முதலை ஒன்று கவ்வியது. வலியால் யானை, ஆதிமூலமே! என்று திருமாலை அழைத்தது. யானையின் அலறலைக் கேட்ட திருமால் தன் கையில் இருந்த சக்ராயுதத்தை ஏவி முதலையைக் கொன்று கஜேந்திர யானையை காப்பாற்றியது ஆடிமாதத்தில் தான்.

விவசாயத்தை காத்து வரும் காவிரித்தாயை வணங்கும் வகையில் ஆடி மாதம் பதினெட்டாம் நாளை ஆடிப்பெருக்கு விழாவாக மக்கள் கொண்டாடுகின்றனர்.

ஆடி மாத பௌர்ணமி நாளில் ஹயக்கீரிவர் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப் படுகின்றது. ஏனெனில் ஹயக்கீரிவர் அவதாரம் நிகழ்ந்தது ஆடி மாதத்தில் தான்.

ஆடி மாதத்தில் வியாச பூஜை நடத்தப் படுகின்றது. குருக்களுக்கெல்லாம் குருவாக போற்றப்படுபவர் வியாசர்.

எனவே ஆடி மாதத்தில் நடைபெறும் ஆடிப் பௌர்ணமி அன்று மாணவர்கள் வியாசரை வணங்கினால் கல்வி வளம் அதிகரிக்கும்.






# ஆடி மாதம் விசேஷங்கள்!

| | |
|---|---|
| ஆடி 1ஆம் தேதி சனிக்கிழமை | ஆடி மாதப் பிறப்பு. ஆடிப்பண்டிகை கொண்டாட்டம் |
| ஆடி 04 ஆம் தேதி செவ்வாய்கிழமை | விஷ்ணு சயன ஏகாதசி கோபத்ம விரதம் |
| ஆடி 07 ஆம் தேதி வெள்ளிக்கிழமை | குரு பூர்ணிமா. பவுர்ணமி பூஜை |
| ஆடி 11ஆம் தேதி செவ்வாய்கிழமை | அங்காரக சதுர்த்தி, வீடு கட்ட வாஸ்து பூஜை செய்ய நல்ல நாள் |
| ஆடி 15 சனிக்கிழமை | நீலகண்ட அஷ்டமி |
| ஆடி 17 திங்கட்கிழமை | ஆடிக்கிருத்திகை |
| ஆடி 18 செவ்வாய்கிழமை | ஆடி 18ஆம் பெருக்கு |
| ஆடி 19 புதன்கிழமை | ஏகாதசி யோகினி ஏகாதசி |
| ஆடி 21 வெள்ளிக்கிழமை | பிரதோஷம் |
| ஆடி 23 ஞாயிற்றுக்கிழமை | ஆடி அமாவாசை சர்வ அமாவாசை |
| ஆடி 26 புதன்கிழமை | ஸ்வர்ண கவுரி விரதம் ஸ்ரீ ஆண்டாள் திருவாடிப்பூரம் |
| ஆடி 27 வியாழக்கிழமை | நாக சதுர்த்தி விரதம் |
| ஆடி 28 வெள்ளிக்கிழமை | நாக பஞ்சமி, கருட பஞ்சமி விரதம் |
| ஆடி 29 சனிக்கிழமை | சஷ்டி விரதம், கருடாழ்வார் ஜெயந்தி |
| ஆடி 30 ஞாயிற்றுக்கிழமை | பானு சப்தமி சூரிய வழிபாடு செய்ய ஏற்ற நாள் |
| ஆடி 31 திங்கட்கிழமை | கடைசி ஆடிப்பண்டிகை |

www.aanmeegamalar.com

இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

**aanmeegamalar.com**

இணையதளத்தை பார்க்கவும்





















# குருபூர்ணிமா

குருபூர்ணிமா என்பது பகவானிடம் வெளிப்படுத்தப்படும் நன்றியுணர்வு மற்றும் தனக்குள் அதிகப்படுத்தும் சைதன்யம்

குருபூர்ணிமா மூலமாக உண்மையான அர்த்தத்தில் பயன் கிடைக்க வேண்டுமென்றால் தினமும் ஒவ்வொரு காரியத்தையும் ஆன்மீக உணர்வுபூர்வமாக செய்வது அவசியம். எல்லா காரியங்களும் ஆன்மீக உணர்வுபூர்வமாக நடப்பதற்கு சில விஷயங்களை புத்திபூர்வமாக புரிந்து கொண்டால் அக்காரியம் ஆன்மீக உணர்வு பூர்வமாக நடப்பது சுலபமாகிறது. ‘எல்லா ஸாதகர்களின் ஆன்மீக உணர்வை அதிகப் படுத்தும் முயற்சி துரித கதியில் நடைபெறுவதற்கு இறைவன் எல்லா விஷயங்களின் திட்டத்தையும் எவ்வாறு வகுத்துள்ளான்’, என்பது பற்றி பராத்பர குரு பாண்டே மகாராஜ் அவர்கள் வருடம் 2017ல் கூறியுள்ள மகத்துவம் நிறைந்த விஷயங்களை இங்கே உங்களுக்கு வழங்குகிறோம்.

பராத்பர குரு பாண்டே மகாராஜ்

‘மனிதனுக்கு ஆனந்தம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இறைவன் இந்த படைப்பை மற்றும் படைப்பிலுள்ள அனைத்துப் பொருட் களை நிர்மாணித்துள்ளான். எல்லாப் பொருட்களிலும் மற்றும் எல்லா ஜீவன்களிலும் பகவானின் சைதன்யம் நிரம்பி உள்ளது’, என்பதை மனதில் கொண்டு காரியங்களை செய்தால் அவற்றிலுள்ள சைதன்யத்திலிருந்து நமக்கு ஆனந்தம் கிடைக்கும். இது போன்று சைதன்யத்துடன் சைதன்யம் இணைவது என்பது மகானந்தத்தை உணர்வது ஆகும். குரு ஸ்மரணத்தால் ஸாதனை மூலமாக நிரம்பியுள்ள சைதன்யத்திடம் நன்றியை வெளிப்படுத்தும் நாளே குருபூர்ணிமா ஆகும்! ‘பகவான் எங்கும் இலவசமாக சைதன்யத்தை நிரப்பி வைத்துள்ளான்’, என்பதை மனதில் இருத்தி பகவானின் சைதன்யத்தை க்ரஹித்துக் கொண்டு நாமத்தின் மூலம் சைதன்யத்தை சம்பாதித் தல் என்பதே குரு பூர்ணிமா!


www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com




நாம் குருவருளால் வருடம் முழுவதும் ஸாதனை செய்து கிடைத்த சைதன்யத்தை குருசரணங்களில் அர்ப்பணித்து ஸாதனையின் மதிப்பாய்வை செய்யும் நாளே குருபூர்ணிமா! இதற்கு ஒவ்வொரு காரியத்தையும் ஆன்மீக உணர்வுபூர்வமாக செய்து வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஆனந்தத்தை அனுபவிப்பதற்கு குருபூர்ணிமா கொண்டாட வேண்டும். அவ்வாறு செய்யும்போது 'நாம் தினமும் சைதன்யத்துடன் காரியத்தை செய்கிறோமா?' என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு நடப்பதற்கு ஒவ்வொரு கணமும் பகவானின் அதாவது சைதன்யத்தை உடன் சேர்த்து ஒவ்வொரு காரியத்தை செய்வதன் வழக்கம் மனதில் ஏற்பட வேண்டும்.

குருபூர்ணிமா அன்று குருதத்துவம் ஆயிரம் மடங்கு அதிக அளவு செயல்பாட்டில் உள் ளது. அதன் பயனைப் பெறுவதற்கு நாம் தினமும் ஒவ்வொரு காரியத்தையும் ஆன்மீக உணர்வு பூர்வமாக செய்தால் நம்மிடமுள்ள சைதன்யம் அதிகமாகும்.

## 1. குருபூர்ணிமா அன்று குருதத்துவம்

எப்படி ஆயிரம் மடங்கு அதிகம் செயல்பாட்டில் உள்ளது?

'குருபூர்ணிமாவின் பயன் எப்படி ஆயிரம் மடங்கு அதிகமாக உள்ளது?', என்பதை புரிந்து கொள்வதற்கு பகவான் இயற்கையில் எவ்வாறு திட்டம் வகுத்துள்ளான் என்பதை அறிந்து கொள்வது அவசியம். விதையில் மரம் ஆவதற்கான திறன் உள்ளது. விதையிலிருந்து ஆயிரம் மடங்கு அதிக பலன் பெறுவதற்கு விதையை கவனித்து அதை சரியான பூமியில் நட்டு அது மரம் ஆகும்வரை அதாவது அதிலிருந்து பலன் கிடைக்கும்வரை தொடர்ந்து செயல்முறையில் ஈடுபடுவது அவசியமாகிறது. அதேபோல் எந்த விதையிலிருந்து மரம் உருவாகிறதோ மற்றும் எதிலிருந்து நமக்கு ஆயிரம் மடங்கு பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அதேபோல் நாமும் ஆரம்பத்திலிருந்து சரியான வழியில் ஸாதனை செய்தால் நமக்கும் குருவருள் கிடைத்து ஆயிரம் மடங்கு அதிக பலன் கிடைக்கும்.

## 1 அ. குருதத்துவம் ஆயிரம் மடங்கு கிடைப்பதற்கு செய்ய வேண்டிய முன் தயாரிப்பு

எப்படி ஒரு விவசாயி வயலில் விதை விதைத்து ஒரு விதையிலிருந்து ஆயிரம் விதைகளை அறுவடை செய்வதற்கு முயல்கிறானோ அதேபோல் நாமும் ஒவ்வொரு காரியத்தையும் பகவானின் நினைவுடன் ஆன்மீக உணர்வுபூர்வமாக செய்து வந்தால் அந்தக்கரணம் தானாகவே தூய்மையாகி ஆத்ம சைதன்யத்தின் மூலம் நமக்கு ஆனந்த அனுபவம் ஏற்படும். அதன் மூலம் சுலபமாக 'யோக: கர்மஸு கௌசலம்' என்பதை உணரலாம்.

(அர்த்தம்: கர்மாவை சமநிலையுடன் கூடிய

யோகமாக செய்யும்போது அது உன்னதமாகி கர்மபந்தத்திலிருந்து விடுவிக்கிறது.) இவ்வாறாக காரியமும் மிக சிறப்பாக நடக்கிறது மற்றும் குருவருளால் இறைவனையும் அடைய முடிகிறது.

இது போன்று ‘குருபூர்ணிமா தினத்தில் ஆயிரம் மடங்கு அதிக செயல்பாட்டில் இருக்கக் கூடிய குருதத்துவத்தின் பயனைப் பெறுவதற்கு வருடம் முழுவதும் சரியான வழியில் ஸாதனை செய்வது எவ்வளவு அவசியம் ஆகிறது’ என்பது கவனத்திற்கு வருகிறது. இதுவே குருபூர்ணிமா பூஜையின் முன்னேற்பாடு ஆகும். இதன் மூலம் உண்மையான ஸாதனை நடைபெறுகிறது.

## 2. ஸாதகர்களின் வாழ்வில் குருவின் அசாதாரண மகத்துவம்

பகவான் ஸத்சித்ஆனந்த ஸ்வரூபமானவர். இந்த படைப்பின் ஒவ்வொரு அம்சத்திலிருந்தும் ஆனந்தத்தைப் பெறுவதற்காக மனிதனைப் படைத்துள்ளார் பகவான் மற்றும் ஸாதனை செய்வதற்காக இந்த உடலைத் தந்துள்ளார். அதற்காக அவரது சரணங்களில் நன்றி பாராட்டி ஸாதனை செய்வது மகத்துவம் நிறைந்தது ஆகும். நாம் இந்த உடல் இருக்கும்வரை தான் இப்பூவுலகில் துரித கதியில் ஸாதனை செய்ய இயலும். அதனால் மனிதப்பிறவி அசாதாரணமானது. ‘ஒவ்வொரு அம்சத்திலிருந்தும் ஆனந்தத்தை எவ்வாறு பெறுவது?’, என்பதை குருவே நமக்குக் கற்றுத் தர இயலும். குரு சிஷ்யனுக்கு ‘ஒவ்வொரு அம்சத்திலும் பகவானை எவ்வாறு காண்பது?’ என்பதைக் கூறுகிறார், கற்றுத் தருகிறார் மற்றும் அவன் மூலம் செய்விக்க வைக்கின்றார். நம்முடைய வாழ்வில் சரியான குரு கிடைப்பதற்கு ஸாதனை செய்வது மிகவும் அவசியமானது ஆகிறது.

உலக விவகாரங்களில் எல்லா அம்சங்களுமே கருவிகளாகின்றன. ஆனந்தமே அடையும் லக்ஷியமாகிறது. குருவின் அருள் கிடைக்கப் பெறாததால் மனிதன் உலக சுகங்களில் மாட்டிக் கொள்கிறான். இதற்கு மாறாக குருவானவர், உலக சுகங்களில் சிஷ்யன் மாட்டிக் கொள்ளாமல் ‘அவற்றிலும் இறைவனை எப்படிக் காண்பது?’ என்ற ஞானத்தை வழங்குகிறார். அத்தகைய குருவிற்கு நன்றி செலுத்தும் நாளே குருபூர்ணிமா; இதையே பகவத்கீதையிலும்,

ஈச்வர ஸர்வபூதானாம்
ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி |
ப்ராமயன்ஸர்வபூதானி யந்த்ரரூடானி மாயயா ||
ஸ்ரீமத்பகவத்கீதை,
அத்தியாயம் 18, ஸ்லோகம் 61

அர்த்தம் : ஹே அர்ஜுனா, அந்தர்யாமியான பரமேஸ்வரன் உங்களை மாயையாகிய சரீர ரூபமான யந்திரத்தில் ஆரூடமாக வைத்து, எல்லாப் பிராணிகளையும் அவரவரின் கர்மப்படி ஆட்டுவித்து எல்லாப் பிராணிகளின் இதயத்திலும் வசிக்கின்றான்.

விளக்கம் : எல்லா படைப்பிலும் பகவானின் சைதன்யமே செயல்படுகிறது. பகவான் எல்லா படைப்புகளையும் அதன் மூலம் கட்டுப்படுத்துகிறான். அதோடு மட்டுமல்லாமல் அந்த எல்லா பிராணிகளின் இதயத்திலும் வீற்றிருந்து செயல்படுகிறான். இதன் அர்த்தம் எங்கும் அவனின் இருப்பே உள்ளது. அவனில்லாமல் காணப்படும் அனைத்துமே பொருளற்றது. கருவியாகவும் அவனே உள்ளான். அதை உணர்ந்து அவற்றை உபயோகித்து ஆனந்தத்தைப் பெறுவதே வாழ்க்கையின் லட்சியம். குருக்ருபாயோகத்தின் மூலமே இதை உணர்ந்து பயன் பெற முடியும்; அதனால் குருவின் மகத்துவம் அசாதாரணமானது. அதற்காக அவருக்கு நன்றி செலுத்தும் நாளே குருபூர்ணிமா ஆகும்.’

இந்த வருடம் ஆடி மாதம் 7ம்தேதி ( ஜூலை 23), வெள்ளிக்கிழமை, வருகிறது.

(மேலும் விவரங்கலுக்கு www.sanatan.org தொடர்பு: 9380949626




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்



# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

**இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி**

aanmeegamalar.com

aanmeegamalr (app)–ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# ஆன்மீக வழியில் அமைதி

ஆன்மீக குருவானவர் தன்னிடம் சீடனாகச் சேர்வதற்கு விரும்பி வருபவனிடம் உலகத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் அநித்தியமானவை என்று கூறுகிறார். அவற்றின் மூலம் வரக்கூடிய பெயர், புகழ், பணம், சொத்து போன்றவை அனைத்தும் அநித்தியமானவை என்று விளக்கிக் கூறுகிறார். ஒரு காலத்தில் அவை அனைத்தும் மாறும் அல்லது அழிந்துவிடும். இவையெல்லாம் சீடன் தன்னுடைய மனதில் பதிய வைப்பதற்குரிய அறிவு விவேகம் அவனிடம் சிறிதளவாவது இருக்கிறதா என்பதைக் குருவானவர் அவனை பரிசோதித்து தெரிந்து கொள்வார். இவ்வுலகத்தில் காணப்படும் பொருட்கள் அனைத்தும், அந்த பொருட்களின் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி எல்லாம் காலவரையறைக்குட்பட்டது. அந்தப்பொருட்களின் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி எல்லாம் ஒரு காலத்தில் அழிந்து விடும். இதனை அறிந்து கொள்ளுவதே விவேகம் என்னும் ஆன்மீக அறிவு ஆகும்.

நல்லவை, கெட்டவை இன்பம் துன்பம் கலந்தததுதான் வாழ்க்கை. இனிப்பு மட்டும் இருந்தால் வாழ்க்கை திகட்டி விடும் அல்லவா? ஒருவன் குருவிடம் சீடனாகச் சேருவதற்கு விரும்பினான். குரு தன்னிடம் சீடனாக சேருவதற்கு விரும்பியவனிடம் ''நீ எனக்கு சீடனாக வேண்டுமானால் இன்று முதல் ஐந்து மாதங்களுக்கு நீ இறை சிந்தனையில் தொடர்ந்து இருக்க வேண்டும். அவ்வாறு நான் கூறியபடி இறைவனைப்பற்றி சிந்தனையில்லாமல் நீ கவனமற்று இருக்கும்போதெல்லாம் உன்னை கண்டிக்கும் நோக்குடன் நான் ஒரு குச்சியால் உன்னை அடித்துக்கொண்டே இருப்பேன்.

நான் உன்னை அவ்வாறு அடிக்காமல் இருக்க வேண்டுமானால் நீ எப்போதும் இடைவிடாது இறை சிந்தனையில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அவ்வாறு நான் அடிக்கும்போது நீ விழிப்புணர்வுடன் இருந்து தடுத்து விடும்போது நான் உன்னை அடிக்க மாட்டேன். அதற்குத் தயாரா?'' என்று குரு சீடனிடம் கேட்டார். அதற்கு அந்த சீடன் சம்மதம் தெரிவிக்கிறான். அவன் பகலில் கவனமுடன் இறை சிந்தனையில் எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கிறான். ஆனால் அவனால் இரவில் தூங்கும்போது இறை சிந்தனையில் இல்லாதபோது குருவிடமிருந்து குச்சியால் அடி விழுவதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

இரவில் தூங்கும்போது குருவிடமிருந்து அடிவாங்குவதை தவிர்ப்பதற்காக அதற்கான வழிமுறைகளை பற்றி சீடன் பலவிதங்களில் யோசித்தான். நாள்தோறும் இரவு நேரத்தில் வழக்கம்போல் து ங்கிகொண்டிருந்தான். ஆனால் குரு அவன் அறைக்குள் நுழையும்போது அவனுடைய ஆழ்மனம் ஓரிருமாதங்களில் விழிப்புணர்வு கொள்வதற்கு ஆரம்பித்தது. குரு அறைக்குள் வருவதை சீடனின் ஆழ்மனம் அவனையும் அறியாமல் அவனுக்கு உணர்த்தியது. அதனால் அவன் குருவின்மூலம் அடி வாங்குவதில் இருந்து தப்பித்துக் கொண்டான். குரு அவனிடம்'' நீ விழிப்புணர்வு அடைந்து விட்டாய். இனி நீ என்னுடைய சீடனாக இருக்கத் தகுதியானவன்'' என்று கூறி அவனை சீடனாக ஏற்றுக்கொண்டார். மனித வாழ்வில் ஆழ்மனதை அறிந்து கொள்வதற்குரிய சீடனின் விழிப்புணர்வு போன்று நிச்சயமாக மனிதனுக்கு தேவை என்பதை இந்த குரு சீடன் கதையின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

மனிதன் ஆழ்மனதிடம் கூறுவதை அல்லது கட்டளையிடுவதை மனம் கேட்டுக்கொண்டு தவறாமல் செய்வதை நமது விழிப்புணர்வு மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இதனை நாம் எப்படி தெரிந்து கொள்வது? நாம் தியானம் செய்வதற்கு

22

www.aanmeegamalar.com

தினமும் காலை ஐந்து மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் காலை ஐந்து மணிக்கு ஏதோவொரு காரணத்தினால் எழுந்து கொள்வதற்கு முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். அதற்கு நாம் இரவு படுக்கப்போகும்பொது நமது ஆழ்மனதிடம் “நான் தியானம் செய்வதற்கு காலையில் ஐந்து மணிக்கு எழுந்து கொள்ள வேண்டும். எனவே மனமே தவறாமல் என்னை ஐந்து மணிக்கு எழுப்பி விடு“ என்று ஆழ்மனதிடம் உணர்வுபூர்வமாக கூறிவிட்டு படுத்து நீங்கள் தூங்கி விடுங்கள். காலையில் ஐந்து மணிக்கு அலாரம் அடித்ததுபோல் நமக்கு ஏதோவொரு குரல் ஒலியின் மூலமாகவோ, நாம் காணும் கனவின் மூலமாகவோ நினைவூட்டி நம்மை ஆழ்மனம் தட்டி எழுப்பிவிடும். நமது ஆழ்மனதின் விழிப்புணர்வு காரணமாக காலை ஐந்து மணிக்கு நம்மை அறியாமல் அப்போது எழுந்து விடுவோம்.

மற்றொரு எளிமையான எடுத்துக்காட்டு பார்க்கலாம். பொதுவாக சிறுவர்கள் தீபாவளியன்று புத்தாடை அணிந்து பட்டாசுகள் போடுவதற்கு விரும்புவார்கள். அன்று தீபாவளி ஞாயிற்றுக்கிழமை. ஒரு சிறுவன் ஞாயிற்றுக்கிழமை என்றால் காலை பத்து மணி வரை எந்தக் கவலையும் இல்லாமல் தூங்குவான். வீட்டில் உள்ள யார் வந்து சிறுவனை எழுப்பினாலும், ‘தூக்கம் வருகிறது’ என்று எழுந்தவன் மீண்டும் படுத்து தூங்குவதற்கு ஆரம்பித்து விடுவான். அந்தச் சிறுவன் தனக்கு தந்தையால் வாங்கிவந்த புத்தாடைகளையும் பட்டாசுகளையும் இரவு பார்த்தவுடன் ‘நான் காலையில் சீக்கிரம் எழுந்து புதுசட்டை போட்டுக்கொண்டு இந்த பட்டாசு எல்லாம் போடவேண்டும்’ என்ற ஆசையில் அவனையறியாமல் உணர்வுபூர்வமாக அவன் மனதோடு பேசிக்கொள்கிறான். தீபாவளியன்று அந்தச் சிறுவன் யாரும் எழுப்பாமலே சீக்கிரம் எழுந்து விடுகிறான். அந்தச் சிறுவன் முதல்நாள் இரவில் ஆர்வத்தின் காரணமாக அவனையும் அறியாமல் தன் மனதிற்கு சீக்கிரம் எழுந்து விடவேண்டும் என்று ஆழ்மனதோடு பேசி விட்டான். மனிதனுடைய ஆழ்மனது மிகுந்த சக்தி வாய்ந்தது.

ஒவ்வொரு மனிதனும் ஒரு லட்சியத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறான். ஒருவன் பணத்தினை சேர்க்கவும், உயர் பதவியை அடையவும் முயற்சி செய்து கொண்டே இருக்கிறான். அவன் அந்த இலட்சியத்தை அடைந்தவுடன் சிறிது காலத்தில் அவன் அடைந்த பொருளையோ, பதவியையோ அவனை விட்டுப் போனபின் ஒன்று அதனைப் பற்றி நாள்தோறும் கவலைப்பட்டுக்கொண்டே இருப்பான். அல்லது வேறு ஒரு லட்சியத்தை நோக்கி அவன் பயணித்துக் கொண்டிருப்பான். நாம் சிறுவனாக இருக்கும்போது மூன்று சக்கர சிறிய சைக்கிளுக்கு பெற்றோரிடம் அழுது ஆர்ப்பாட்டம் செய்திருப்போம்.

கொஞ்சம் பெரியவனான பின்னர் இருசக்கர சைக்கிள் மீது நாம் ஆசை கொள்வோம். இப்படி மனிதனுடைய வயது ஏறிக்கொண்டு போகும்போது, அவனுடைய ஆசைகளும் இலட்சியங்களும் மாறிக்கொண்டே இருக்கும். அதுபோல்தான் இந்த உலகில் காணப்படும் பொருள்கள், செயல்பாடுகள் அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. அவைகள் மாறுவதற்கு செயல்படுவதற்கு வேண்டுமானால் சிறிதுகாலம் எடுத்துக்கொள்ளலாம். அந்தப் பொருட்கள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் அவற்றின் நிலையும் தன்மையும் மாறிக்கொண்டே இருக்கும். இதனை உணர்வதற்கு நமக்கு ஆன்மீக அறிவு, பக்தி, விவேகம் போன்றவை இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நாம் ஆன்மீகத்தில் முழு ஈடுபாட்டுடன் செயல்புரிய முடியும்.



ஆன்மிகம் உங்களை பொன்பொருள்களை சம்பாதிக்க வேண்டாம், அதனை அனுபவிக்க வேண்டாம் என்று நமது சாஸ்திரங்கள் இதிகாசங்கள் உபநிடதங்கள் ஒருபோதும் கூறவில்லை. நமது சாஸ்திரங்கள் இதிகாசங்கள் உபநிடதங்கள் அவ்வாறு ஒருபோதும் நீ இந்த உலகில் வாழ்வதற்குத் தேவையான பொன்பொருள்களை, சொத்துக்களை, வசதிவாய்ப்புகளை மட்டும், உடல் உழைப்பினால் நேர்மையான முறைகளில் சம்பாதித்துக் கொள். அதன்மூலம் வரக்கூடிய இன்பங்களை எல்லாம் நன்கு அனுபவித்துக்கொள் என்றுதான் கூறுகிறது. உன்னை உலகில் உள்ள பொருள்களை எல்லாம் வெறுத்து துறவு நிலைக்கு சென்று விடு என்று நமது வேதங்கள் உபநிடதங்கள் இதிகாசங்கள் கூறவில்லை. ஆனால் நீ விரும்பும் அல்லது அடையும் பொருள்களினால் வரக்கூடிய இன்பங்கள் சுகங்கள் எல்லாம் நிரந்தரமானவை அல்ல என்பதை மட்டும் உன் மனதில் நிலை நிறுத்திகொண்டு, உலகில் நீ செயல்புரிய வேண்டும். அவ்வாறு நீ செயலாற்றும்போது மனதில் ஒருவிதமான அமைதி உன்னை அறியாமல் ஏற்பட்டு விடும். அதன்மூலம் உலகில் நீ அமைதியான வாழ்வைப் பெறுவதற்கு முடியும். ஆன்மிகத்தில் கூறப்பட்டுள்ள விவேகத்தின் மூலம் அறிந்து கொண்டு, முயற்சி செய்வதோடு ஆன்மீகப் பயிற்சியை தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மனஅமைதியும் ஒருவிதமான ஞானம் ஆகும். மனிதனுக்கு ஞானத்தை அடையவேண்டும் என்ற ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது. அதனை அடைவதற்கு உரிய கருவியினால்தான் முடியும். எடுத்தக்காட்டாக ஒரு மலரை ஒருவர் சிறிது தூரத்தில் வைத்துக் கொண்டு அந்த மலரின் வாசனை என்ன என்று மற்றொருவரிடம் கேட்டால். அவர் கண்ணால் அந்த மலரைப் பார்த்துக்கொண்டு கூறமுடியாது. அந்த மலரை மூக்கினால் நுகர்ந்து பார்த்துதான் வாசனையை கூறமுடியும். அதேபோல் அந்த மலரின் நிறம் என்ன என்பதை மூக்கினால் அறிந்து கொள்ள முடியாது, அவர் தன் கண்களால் பார்த்துதான் பூவின் நிறம் அமைப்பு இதழ்கள் எத்தனை என்ன என்பதுபற்றி கூறமுடியும். அந்த மலரின் பெயர் என்ன என்று கேட்டால் கண்ணாலோ மூக்கினாலோ கூறமுடியாது வாயினால்தான் கூறமுடியும்..

எனவே ஒரு பொருளின் தன்மையைப்பற்றி அறிந்து கொள்ளவோ கூறவோ அதற்குரிய கருவியின் மூலம்தான் அறிந்து கொள்ள அல்லது தெரிவிக்க முடியும். மலரின் மென்மையை உணர்வதற்கு வேண்டும் என்றால் அதனை கையினால் தொட்டு உணர்ந்துதான் கூறமுடியும். அதேபோல்தான் ஒரு பொருளின் தன்மையை அறிய வேண்டுமானால் அதை உணரக்கூடிய கருவியின் மூலமாகத்தான் அறியமுடியும். நாம் ஞானத்தை அறிய வேண்டுமானால் ஆன்மீக அறிவு என்னும் கருவியின் மூலம்தான் அறியவோ உணரவோ முடியும். ஞானத்தை கொடுக்கக்கூடிய உயர்ந்த கருவிதான் ஆன்மீக அறிவு எனப்படும். இத்தகைய ஆன்மீக அறிவு ஒரு மனிதனிடம் இருந்தால்தான், அவன் தியானம், தவம், பக்தி போன்றவைகளில் ஈடுபடுவதற்கு முடியும்.

சிலபேர் கண்களை மூடிக்கொண்டு தனிமையில் தியானம் இருந்தால் ஞானம் கிடைத்து விடும் என்று நினைத்துக் கொள்வர். அப்படிச் செய்வதால் நமது குழம்பிய மனதுக்கு வேண்டுமானால் ஒரு தெளிவு கிடைக்கும். அதன் மூலம் தற்காலிகமாக ஒருவிதமான மனஅமைதிகூட கிடைக்கலாம். இந்த உலகத்தைப் பற்றிய நிலையாமைப் பற்றி அறிவு நமக்கு வரவேண்டும். எந்தெந்தக் கருவியைப் பயன்படுத்தினால் இந்த நிலையாமை பற்றி அறிவு கிடைக்கும் என்பது பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாஸ்திரங்கள் இதிகாசங்கள், உபநிடதங்கள் இந்த உலகத்தின் நிலையாமையைப் பற்றி தெளிவாக நமக்கு எடுத்துக் கூறுகிறது. அறிவியல் மூலம் பௌதிகம் படிக்கிறோம் என்றால் அதன் மூலம் ஒரு பொருளின் தன்மைகளைப் பற்றி அறிந்து கொள்ளமுடியும். இரசாயனம் பற்றி படித்தால், ஒரு பொருள் மற்றொரு பொருளுடன் கலக்கும்போது அந்தப் பொருளில் ஏற்படும் மாறுதல்தன்மைகளை பற்றி அறிந்து கொள்ளலாம்.

மனிதர்களின் மனநிலை, செயல்பாடுகள் பற்றி அறிந்துகொள்ளவேண்டுமானால் மனோதத்துவ நூல்கள் மூலம் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது, மனிதனுடைய அனுபவத்தின் மூலம்தான் முழுமையாக

அறிந்து கொள்வதற்கு முடியும். ஆன்மீக ஞானம் இந்த உலகத்தில் உள்ள பொருள்களின் நிலையாமைப் பற்றி தெளிவுபடுத்துகிறது. இந்த நிலையாமைப் பற்றி தெளிவு பெறும்போது நமக்கு மோட்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, இந்த உலகில் காணப்படும் பொருட்களின் மூலம் நமக்கு வரக்கூடிய இன்பத்தை சுகத்தை அடைவதற்கு இந்த மனம் ஏக்கம் கொள்வதில்லை. இந்த நிலையில்லாத பொருள்களின்மீதும் நமக்கு தீராத ஆசை உண்டாகாது. உலகில் காணும் பொருள்களின்மீது ஆசை இல்லை என்றால் மனஅமைதி தானாக நம்மை அடைந்து விடும். புத்தபகவான் ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று போதித்தார். திருமூலர் ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனுடனாலும் ஆசை அறுமின்கள் என்று ஆசைக்கு அணை கட்டச்சொல்கிறார்.

நமது அனுபவத்திற்கும் அறிவுக்கும் ஒத்துப்போகவேண்டும் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. நமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போதுதான் நமது அறிவு தெளிவடைகிறது. ஆன்மீகத்தில் எது காரியமோ அது அநித்தியம், எது காரணமோ அது நித்தியம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதனைப்பற்றி மனதிற்குள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். எடுத்துக்காட்டாக மரத்தில் மேஜை, நாற்காலி, சிற்பங்கள் பொம்மைகள் போன்ற பலவிதமான பொருள்களை அழகியமுறையில் செய்கிறோம். அல்லது அவற்றை நம் கண்களால் பார்க்கிறோம். அந்த மரச்சாமான்கள்களை நாம் நினைத்தால் உடைத்து விடலாம் அல்லது நாளானால் அந்தப்பொருள்களே தானாகவே உடைந்து விடலாம். ஆனால் அந்தப் பொருட்கள் செய்வதற்கான மரம் என்ற மூலப்பொருள் அழிவதில்லை அது நித்தியம் ஆகும். மரமானது நாற்காலி மேசை, மரப்பொம்மைகள் என உருவங்கள் மாறலாம் ஆனால் மரம் என்ற மூலப்பொருள் என்றும் மாறாத பொருள் ஆகும்.

தங்கத்திலிருந்து பலவிதமான அழகிய ஆபரணங்கள் செய்யலாம். அந்த ஆபரணங்களுக்கு காசுமாலை, ஒட்டியாணம் நெக்லஸ் போன்ற பெயர்களும் உண்டு. காசுமாலை துண்டு துண்டாக அறுந்து விட்டாலோ, பழுது பட்டாலோ அதன் பெயர் காசுமாலை என்று கூறுவதில்லை. ஆனால் அது உருவாவதற்கு காரணமான தங்கம் என்ற மூலப்பொருள் மட்டும் மாறுவதில்லை. தங்கத்திலிருந்து காசுமாலை செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் காசுமாலை என்பது காரியம் ஆகும். காரியம் என்பது அநித்தியம் என்று ஆன்மிகம் கூறுகிறது. காசுமாலையை நாம் நினைத்தால் நெக்லஸ் ஆக மாற்றி செய்து விடலாம்.

காரணம் என்பது அநித்தியம் என்று ஆன்மிகம் கூறுகிறது. தங்கம் என்பது காரணப் பொருள். ஆனால் தங்கம் என்ற மூலப்பொருளைகொண்டு நாம் நினைத்தபடி வேறு ஒரு மூலப்பொருளாக மாற்றுவதற்கு முடியாது. அதாவது தங்கத்தை வெள்ளியாகவோ பித்தளையாகவோ மாற்றுவதற்கு முடியாது தங்கத்தினால் காசுமாலை என்ற நகை செய்கிறோம். காசுமாலை செய்வதற்கு தங்கம் என்பது காரணமாக இருக்கிறது. இந்த உலகமே காரண காரியங்களினால்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ளலாம். மனிதனுடைய வாழ்க்கை மற்றும் செயல்பாடுகள் பற்றிய கருத்துக்கள் அனைத்தும் அடிப்படையிலேயே தவறானவைகளாக நம்முடைய மனதில் சில தீய எண்ணங்கள் செயல்கள் எல்லாம் அறிந்தும் அறியாமல் நன்கு பதிந்து விட்டன.

அதாவது அவைகள் மனதில் குப்பைகள்போல் சேர்ந்து விட்டன. அவ்வாறு தவறானவையாக நம் மனதில் பதிந்து விட்டதை குப்பைகளை அகற்றுவதைப்போல் நம் மனதிலிருந்து நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமது வாழ்க்கை பற்றிய உண்மைகளை நாம் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். ஆன்மீக அறிவு வைராக்கியம் போன்ற பண்புகள் இருந்தால்தான் நாம் தேடும் விரும்பும் மனஅமைதி கிடைக்கும். நமது வாழ்க்கை பற்றிய தெளிவு கிடைக்க வேண்டுமானால் ஆன்மீக வழியில் சென்றுதான் நாம் நிரந்தரமான மனஅமைதியைத் தேடவேண்டும். நித்தியமான நிரந்தரமான மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கைக்கு ஆன்மீகம்தான் வழி காட்டுகிறது என்பதை உணர்ந்துகொண்டு, அதன்படி நாம் செயல்புரியவேண்டும்.

ஸ்ரீ ரமணமகரிஷி நமது வாழ்வின் மனஅமைதிக்கு மூன்று விசயங்களை வாழ்வில் தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்று கூறுகிறார். முதலாவது தவறிப்போன பொருட்களைப் பற்றியோ நடந்து முடிந்த செயல்பாடுகளைப் பற்றியோ கவலைப்படக்கூடாது. அவ்வாறு தவறிப்போனதைப்பற்றி மனிதன் மனதில் கவலைப்பட்டுக்கொண்டு இருப்பதால் அவனிடம் என்ன பயன் ஏற்பட்டு விடப்போகிறது.

அதனால் அவன் மன அமைதியையும் உடல் ஆரோக்கியத்தையும் இழக்க நேரிடலாம். அதனால் அவன் வாழ்வில் அமைதியைக் காணமுடியாது.

இரண்டாவது மனிதன் தவறிப்போன பொருட்களாகவோ நடந்து முடிந்த செயலாகக்கூட இருக்கலாம். அதுபற்றி கவலைப்பட்டுக்கொண்டு இருந்தால் தவறிய பொருளோ அவனுடைய கடந்தபோன செயலோ கடந்த காலமோ திரும்ப வரப்போவதில்லை. எதற்காக தவறிய பொருளை பற்றி மனதில் நினைத்து கவலைப்பட்டுக்கொண்டு உனது பொன்னான நேரத்தையும் மன அமைதியையும் கெடுத்துக்கொண்டு இருக்கிறாய். நாம் தவறிய பொருள் மீண்டும் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவது தவறு இல்லை. தவறிய பொருளைப்பற்றி இடைவிடாது நினைத்துக் கொண்டே இருப்பதுதான் தவறு. தவறிய பொருளைப் பற்றி மனம் கவலைப்படாமல் நமது மனம் பக்குவம் அடைவதற்கு ஆன்மிகம் வழி காட்டுகிறது.

நம்மிடம் உள்ள ஒரு பொருள் தொலைந்து போனால் அல்லது காணாமல்போன பொருள் பற்றி நாம் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், கிராமங்களில் உள்ள பெரியவர்கள் பேச்சு வழக்கில் ‘ஏன் வீணாக தொலைந்துபோன பொருளைப்பற்றி கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறாய்? உன்னோட பொருளாக இருந்தால் அது எப்படியும் திரும்பவும் உன்னிடமே வந்து விடும்.’ என்று ஆறுதலாக கூறுவதைக் கேட்டிருப்போம். இதனை கீதாசாரம் “உன்னுடையதை எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்? எதை நீ உலகுக்கு கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு“ என்று கூறுகிறது. இந்த கீதாசாரத்தின் அமுதமொழிகளை நாம் மனதில் உணரும்போது நம்மை அறியாமல் நாம் மனஆறுதலையும் மனஅமைதியையும் பெறுவதை நாம் உணரலாம்.

மூன்றாவது பிறரோடு உங்களை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். அவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பதால் எந்தவிதமான பயனும் ஏற்படுவதில்லை. பிறருடைய நற்குணங்கள் நல்லபண்புகளை நம்மோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன்படி வாழ நினைப்பது தவறு இல்லை. ஆனால் மற்றவர்களிடம் இருக்கும் பொன்பொருள், சொத்து, பதவி செல்வாக்கு போன்றவற்றை நம்மோடு ஒப்பிட்டு ஒருபோதும் பார்க்கக் கூடாது. இதனைத்தான் மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டு ஒருபோதும் பார்க்காதீர்கள் என்று ரமணமகரிஷி கூறுகிறார். மற்றவர்களிடம் இருக்கும் சொத்து, பணம் பொருள், பதவி, செல்வாக்கு போன்றவற்றை நம்மோடு ஒப்பிட்டுப் பார்ப்பதால் பொறாமை, பகை, வெறுப்பு போன்றவைகள் நம்மையறியாமல் நம் மனதில் புகுவதற்கு இடம் உண்டு.

எல்லா மனிதர்களையும் திருப்திபடுத்த நினைப்பது அது தேவையற்ற நம் மீது நாமே ஏற்றிக் கொள்ளும் மனச்சுமையாகும். எடுத்துக்காட்டாக நீ பணிபுரியும் நிறுவனத்தில் உனக்குக்கீழ் பணிபுரியும் ஊழியர் ஒரு தவறு செய்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். அதனை தட்டிக் கேட்பதுதான் உனது கடமையாகும். அதற்கு மாறாக அந்த ஊழியர் உனது மேலதிகாரிக்கு வேண்டப்பட்டவராகவோ அல்லது அவரது உறவினராகவோ இருப்பது தெரிந்துகொண்டு தவறு செய்த ஊழியரைத் தட்டிக் கேட்காமல் இருந்தால் அந்த ஊழியருக்கும் மேலதிகாரிக்கும் வேண்டுமானால் திருப்தியாக இருக்கும். ஆனால் நீ பணிபுரியும் நிறுவனத்துக்கு துரோகம் செய்து விட்டதாக உன்னொட மனம் உன்னையும் அறியாமல் நாள்தோறும் உன்னை வருத்திக்கொண்டேயிருக்கும்.

இந்த மனச்சுமையை நீயேதான் உன்மீது ஏற்றிக்கொண்டு உடலளவில் மனதளவில் கஷ்டப்படுகிறாய். அந்த ஊழியரையும் மேலதிகாரியையும் திருப்திபடுத்த தேவையற்ற மனச்சுமையை உன்னிடம் வரவழைத்துக் கொண்டாய். எந்தநிலையிலும் உனது கடமையிலிருந்து தவறக்கூடாது. என்று ஆன்மிகம் வலியுறுத்திக் கூறுகிறது. கீதையில் ‘கடமையைச் செய்’ என்றுதான் கூறுகிறது. எல்லா மனிதர்களையும் திருப்திபடுத்த நினைப்பது மனச்சுமையை மனதில் ஏற்றிக்கொள்வதால் உன்னுடைய மன அமைதியை இழக்க நேரிடும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். (அமைதி தொடரும்)

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
Google Play
Search
Categories
Home
Top charts
New releases
Apps
My apps
Shop
Games
Family
Editors' Choice
Account
Payment methods
My subscriptions
Redeem
Buy gift card
My wishlist
My Play activity
Parent guide
Aanmeega Malar - ஆன்மீக மலர் - All in One App
mobigoods
News & Magazines
Contains ads
This app is compatible with some of your devices.
Installed
ஆன்மிகமலர்
aanmeegamalar
Subscribe
MONEY
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...